விலை சதம் 50 ★ பக்கங்கள் — 8

சுவையான ஐஸ்கிறீம் வகைகளுக்கும் கோழிப் புரியாணி நூடில்ஸ், பொம்பே சுவீட்ஸ், றிக்கோ பிடா வகைகளுக்கும்

றிக்கோஹோட்டல்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 464


# ஈழநாடு வார மலர்

*THE EELANADU VARAMALAR*


'மில்க்வைற் செய்தி- இதழ் 21''

10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 நீம் வாசனை சோப் அல்லது 2 மெடிக் கேட்டட் சோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை அனுப்பி மேற்படி செய்தியை பெற்றுக்கொள்ளுங்கள்.

விநியோகப் பகுதி
மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த. பெ. எண். 77
யாழ்ப்பாணம்.

மலர் 19 ஆவணி 26 றமழான் 26 ஞாயிற்றுக்கிழமை [11—9—77] இதழ் 211

### கலவரத்தில் உயிர் துறந்தவர்களுக்காக

# "மூன்று மாத துக்கம் அனுஷ்டிக்கவேண்டும்"

## பாதிக்கப்பட்ட ஊழியர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு நாட்டில் அண்மையில் ஏற்பட்ட பயங்கர கலவரத்தின்போது பல தமிழ் உயிர்கள் பறிக்கப்பட்டதற்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் அடுத்த 3 மாத காலத்தையும் தமிழ் மக்கள் தேசிய துக்கதினமாக' அனுஷ்டிக்கவேண்டும்.

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகம் தமிழ் மக்களுக்கு இவ் வேண்டுகோளை விடுத்துள்ளது.

அக்டோபர் 1-ம் தேதி முதல் டிசம்பர் 31ம் தேதிவரை துக்க தினம் அனுஷ்டிக்கப்பட வேண்டும் என்று அவ்வேண்டுகோளில் கூறப்பட்டுள்ளது.

நாட்டிலுள்ள சகல மதத்தினரும், அடுத்த 3 மாத காலத்தை துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு சகல மத ஸ்தாபனங்களுக்கும் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அடுத்த 3 மாத காலத்திற்கு படக்குகிழக்கிலுள்ள சகலசினிமாத் தியேட்டர்களையும், தவறணைகளையும், மதுபானக்கடைகளையும்மூடிவிடுமாறு உரிமையாளர்களுக்கும் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அடுத்த 3 மாத காலத்திற்கு கோவில்களில் வருடாந்த உற்சவங்களையொட்டி நடைபெறும் சகல திருவிழாக் கொண்டாட்டங்களை நிறுத்தி [illegible] வழிபாட்டிலும் நேரத்தை செலவிடுமாறு சகல கோவில் தர்மகர்த்தாக்களுக்கும் கழகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. [க]

## நாளை நல்லூர் தேர்

யாழ்ப்பாணம், ஞாயிறு நல்லூர் கந்தசுவாமி கோயில் தேர்த்திருவிழா நாளைக் காலை நடைபெறும்.

காலை 7 மணிக்கு சுவாமி தேரில் வீதி உலா வருவார். பகல் 1-15 க்கு சுவாமி தேரிலிருந்து இறங்குவார். 2 மணிக்கு வசந்த மண்டபத்தில் [illegible] நடைபெறும்.

### தீர்த்தம்

நாளை மறுதினம் காலை 8 மணிக்கு தீர்த்தோற்சவம் நடைபெறும். மறுநாள் மாலை 5-30 மணிக்கு பூங்காவனம் நடைபெறும்.

8-ம் பக்கம் பார்க்க

## இம்மாத இறுதியில் ஜி.சி.ஈ. (உயர்தர) முடிவுகள்

கொழும்பு சனி ஏப்ரலில் நடைபெற்ற ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சை முடிவுகள் இம்மாத இறுதியில் வெளிவரும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

73 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றிய இப்பரீட்சை முடிவுகள் கடந்தமாத இறுதியில் வெளிவரும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் பொதுத்தேர்தல் காரணமாகவும் அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதசம்பவங்கள் காரணமாகவுமே இம் முடிவு வெளியாவதில் தாமதம் ஏற்பட்டது. என்று தெரிவிக்கப்பட்டது. (இ)

### யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த

## 6000 தமிழ் ஊழியர்கள் கலவரத்தினால் பாதிப்பு!

யாழ்ப்பாணம், ஞாயிறு நாட்டில் ஏற்பட்ட இனவாத சம்பவங்களினால் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 6117 தமிழ் ஊழியர்கள் பாதிப் [illegible] கப்பட்ட தமிழ் ஊழியர் சங்கத்திற்கு புள்ளிவிபரங்கள் கிடைத்துள்ளன. இதனால் மற்றைய தமிழ்ப் பகுதியான திருகோணமலை, மட்டக்களப்பு, மன்னார், வவுனியா மாவட்டங்களில் சங்க நடவடிக்கைகளை விஸ்தரித்து மற்றை [illegible] கப்பட்ட [illegible] நலன்பேண சங்கம் நடவடிக்கை மேற்கொள்ளப்படுள்ளன.

யாழ். மாவட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களின் விபரம்: 413 டாக்டர்கள்கள், 245 பொறியியலாளர்கள், நிர்வாக சேவை உத்தியோகத்தர் 154, கணக்காளர்கள் 45, நடுத்தர தொழில்நுட்ப உத்தியோகஸ்தர்கள 1806, லிகிதர்கள் தட்டெழுத்தகளர்கள் 2500, சிறுதர ஊழியர்கள் 550, புகையிரத, தபால் தந்தி போக்குவரத்துசேவைஉத்தியோகத்தர்கள் 600, கூட்டுத்தாபன உத்தியோகஸ்தர்கள் 350, தனியார்துறையினர் 50 பேர். ஆசிரியர்களின் மதிப்பீடு சரியாகத் தரப்படவில்லை.

காரியக்கமிட்டியின் தீர்மானங்களாக பின்வருவனவன நிறைவேற்றப்பட்டுள்ளன. கிராம ரீதியாக நடவடிக்கைக் குழுக்களை நியமித்தல், வெளியிடங்களிலுள்ள தங்கள் உடமைகளைக் கொண்டுவருவதற்கு அரசாங்கத்திடம் பாதுகாப்பு படையினரின் உதவியைக் கோருதல், இலைச்சங்கங்களின் கூட்டங்களை கிழமைதோறும் நடாத்தல், பாதிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சேமநலன்களைக்கருதி அவர்களுக்குப்புனர் வாழ்வுக்காக தொழில் அதிபர் மற்றும் ஸ்தாபனங்களுக்கும் கழக உறுப்பினர்களாக பாண்டித்தியம் பெற்றவர்கள் மூலம், அபிவிருத்தி தொழில் நுட்பஆலோசனை செய்து கொடுப்பதற்கு உபகுழுக்கள் நியமிக்கப்படும். இவை காப்புறுதித் திட்டம், தொழில்பேட்டை நிறுவும் திட்டம், பென்ஷன் திட்டம், விவசாயத் திட்டம், பண்ணைகள் அமைக்கும் திட்டம், நீர்ப்பாசனத் திட்டங்களுக்கு உதவவுள்ளன.

காரியக்கமிட்டி வாரத்தில் இரு தடவையாக செவ்வாய்க்கிழமையும், சனிக்கிழமையும் கூடவுள்ளன. [கெ]

### தமிழ் ஆசிரியர்

## தூதுக்குழு இன்று கல்வி மந்திரியை சந்திக்கும்

யாழ்ப்பாணம், ஞாயிறு பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் பற்றியும், அவர்கள் சமர்ப்பித்துள்ள கோரிக்கையை வலியுறுத்தவும், இலங்கை தமிழாசிரியர்சங்க தூதுக்கோஷ்டியொன்று கல்வி அமைச்சரை சந்திக்கவிருக்கிறது.

சங்க பொதுச்செயலாளர் திரு ந பாலசுப்பிரமணியம் தலைமையில் செல்லும் இத் தூதுகோஷ்டியில் நிர்வாக செயலாளர் திரு. அ. பொன்னம்பலம், செயற்குழு உறுப்பினர் திரு. க. சுப்பிரமணியம் இடம்பெறுவார்கள்.

தற்போது மட்டக்களப்பிலிருக்கும் சங்கத் தலைவர் திரு. எஸ். கே. வணசிங்காவும், இப் பேச்சுவார்த்தையில் பங்குபற்றுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கோஷ்டியினர், பாதிக்கப்பட்ட தமிழ் ஆசிரியர்களுக்கு இம்மாதம் 30-ந் தேதி வரை கடமைலீவு வழங்குமாறு வலியுறுத்துவார்கள். சங்கத்தால் ஏற்கனவே கல்விஅமைச்சருக்கு அனுப்பப்பட்ட கோரிக்கைகள் பற்றியும் பேச்சுவார்த்தை நடத்துவார்கள்.

இத் தூதுகோஷ்டியினர் இன்று விமான மூலம் கொழும்பு செல்வார்கள்.

கல்விஅமைச்சருடன் சந்தித்து முடிவு அறிவிக்கும் வரை பொறுத்திருக்குமாறும் இவ்வார இறுதியில் நடைபெறவிருக்கும், கூட்டத்தில் பேச்சுவார்த்தை முடிவுகள் அறிவிக்கப்படுமென்றும் சங்க பொதுச்செயலாளர் திரு. ந பாலசுப்பிரமணியம், விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். [க]

## யாழ். அகதி முகாம்கள் வேறு இடங்களுக்கு மாறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ். மாவட்டத்தில் இயங்கும் அகதிகள் முகாம்கள், பாடசாலைகள் ஆரம்பிப்பதற்காக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றன. நேற்றைய தினம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி முகாமில் இருந்தவர்கள் அச்சுவேலிக்கு மாற்றப்பட்டனர். கோப்பாய் கொழும்புத்துறை முகாம்களில் இருப்பவர்கள் ஓரிருதினங்களில் கீரிமலை மடத்துக்கு மாற்றப்படவுள்ளனர், டிறிபேக் கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி, பண்ணை முகாம்களில் இருப்பவர்கள் அச்சுவேலிக்கு மாற்றப்படுவர். பாடசாலைகள் மூன்றும் தவணைகளுக்கு இம் மாதம் 14-ம் திகதி திறக்க வேண்டியிருப்பதால், முகாம்களை மாற்றவேண்டியிருப்பதாக யாழ். மாவட்ட சமூக சேவை அத்தியட்சகர் திரு. கெங்காதரன் தெரிவித்தார்.

### இந்த முகாம் மூடப்படும்

யாழ். இந்துக்கல்லூரி அகதிகள் முகாம் இரண்டொரு தினங்களில் மூடப்படும் என்றும், அங்கு தங்கியிருப்பவர்கள் அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கும், கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரிக்கும் மாற்றவிருப்பதாக இந்துக்கல்லூரி அகதிகள் முகாமிற்கு பொறுப்பாக இருக்கும் முன்னைநாள் சுங்கப்பகுதி அதிபரும், தொழிற்சங்கவாதியுமான திரு ப. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்,

இம்முகாமில் இதுவரை 258 பேர் அகதிகளாக வந்துள்ளனர். இவர்களில் புனர்வாழ்வு அளிக்கப்பட்டவர்கள் 136, இடமாற்றப்பட்டவர்கள் 58 மீதியானோர் திங்கட்கிழமை அச்சுவேலிக்கு மாற்றப்படுவர்.

இம்முகாமை நல்ல முறையில் இயக்குவதற்கு பொதுன் உணவுப்பண்டங்கள் போன்றவற்றை தொண்டுள்ளம் கொண்டவர்கள் தாராளமாக வழங்கியதால் அகதிகளுக்கு சகல வசதிகளையும் செய்து கொடுக்கக்கூடியதாய் இருந்ததென திரு. ப. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

பாடசாலை இம்மாதம் 14-ம் திகதி ஆரம்பமாவதால் அகதிகளை இடமாற்றம் செய்து முகாமை மூடிவிடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இக் கல்லூரி அதிபர் அகதிகளுக்கு உணவு சமைப்பதற்கு கல்லூரியில் ஒழுங்குசெய்து சேவையாற்றினர், வைத்திய உதவிகளை சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர் செய்தனர். (கெ)

## புதிய கடைகளுக்கான அடிக்கல் நாட்டப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வன்செயல்களின் போது தீயிடப்பட்டு எரிந்த கடைகளுக்கு பதிலாக புதிதாக கடைகள்கட்டுவதற்கான அடிக்கற்களைநேற்றுமுன்தினம் யாழ். நகர விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானத்தால் பஸ்நிலையத்திலும் பழைய சந்தையிலும் நாட்டப்பட்டது.

பழைய மார்க்கட்டில் 104 கடைகளும், பஸ் நிலையத்தில் 26 கடைகளும் கட்டுவதற்கான வேலைகள் அடுத்த வாரம் ஆரம்பமாகும். இக் கடைகளை உடன் கட்டிக் கொடுப்பதற்காக தனியார் துறையினருக்கே கட்டிட ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. இக் கடைகள் கட்டுவதற்கு மாநகரசபை நாலரை லட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. கடைகள் விரைவாக கட்டப்பட்டு டிசம்பர் முதலாம் திகதியே திறப்புவிழா நடைபெறும்.

இக் கடைகளில் முன்னர் வியாபாரம் செய்தவர்களைத் தவிர வேறுயாருக்கும் இக் கடைகள் வழங்கப்படமாட்டாதென விசேட ஆணையாளர் திரு. க. சிவஞானம் தெரிவித்தார். (கெ)

# வரி விளம்பரம்

## தேவை

பேக்கரும் இரண்டு உதவியாளர்களும் தேவை. 13-9-77-ம் திகதிக்கு முன் அத்தாட்சிப் பத்திரங்களுடன் நேரில் வரவும்: Dr. J. P. C. பிலிப்ஸ், 77, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7251. 7044

கிளிநொச்சி, பரந்தன், வவனியா நகர எல்லைக்குள் வீடு கட்டக்கூடிய காணி குறைந்தது 5 பரப்பு தேவை. விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம் 7018, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7018

யாழ். இந்து வேளாள குடும்பப் பெற்ருேர், குணம், நிறம், அழகு, உயர் உத்தியோகத்திற்குரிய கல்வித் தேர்ச்சியும் பெற்ற தமது இளம் புதல்விக்கு, டாக்டர், அக்கவுண்டன், என்ஜினியர் (முப்பது வயதளவில்) தேடுகின்றனர். சீதனம் - பெறுமதி 2 லட்சம். (1) யாழ் மாநகர சபை எல்லைக்குள் பெரிய வீடுவளவு (மாத வாடகை முன்னூறு ரூபாய்), (2) வீடு கட்டக்கூடிய காணி அருகாமையில், (3) ரொக்கம் ஐம்பதினாயிரம் - நகை உட்பட. முழு விபரத்துடனும் ஜாதகத்துடனும் விண்ணப்பிக்கவும்: விளம்பர இலக்கம்: 7042 C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 7042

ரங்காவின் பிரசித்திபெற்ற குச்சுப்பிடி, மோகினி நடன வகுப்புகள் நடத்த யாழ்.நகரிலும், பருத்தித்துறையிலும் [illegible] தேவை. பஸ் ஸ்ராண்டுக்கு அருகாமை விரும்பத்தக்கது.- கு. விவேகானந்தன், 'ஆனந்தன் இல்லம்' வல்வெட்டித்துறை. 7052

## விற்பனைக்கு

வடமராட்சி இந்துமகளிர் கல்லூரிக்கு அருகாமையில் றஞ்சன் வாசிகசாலை வீதியில் 7 பரப்பில் வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: A. ஆனந்தசிவம், 'கதிரமலைவாசம்', புலோலி மேற்கு, புலோலி. 7022

வட இந்துமகளிர் கல்லூரிக்கருகாமையில் இரண்டு துண்டு 4 பரப்புக் காணிகள் விற்பனைக்குண்டு விபரங்களுக்கு. A. ஆனந்தசிவம், புலோலி மேற்கு புலோலி. 7023

ஏழு பரப்பு குடியிருப்பு நிலம் விலை ரூபா 60,000/ விற்பனைக்குண்டு. சொந்தக்காரர் செ. மயில்வாகனம், 57, செட்டித்தெரு, நல்லூர் தொடர்புகொள்ளவும். 7049

நாயன்மார்க்கட்டில் வடமாநில கல்விக் கந்தோருக்கு சமீபமாக மூன்று படுக்கை அறையுள்ள வீடொன்றும், அத்திவாரமிட்டு முடிவுபெருத நிலையிலுள்ள வீடொன்றும் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும்: வசந்தம் புத்தக நிலையம், முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம். 7048

மக்கள் வங்கி எழுதுவினைஞர் பதவி விண்ணப்பம் சதம் 60. விபர இதழ் சதம் 15. தபாலில் பெற படிவங்களின் பெறுமதிக்கு முத்திரைகளும் 15 சத முத்திரை ஒட்டிய எனவெலப்பும் அனுப்புக. ஆனந்தா புத்தகசாலை, 226 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் 7046

## விற்பனைக்கு

அக்காய் (Akai) X-1800 SD றேப்றெக்கோடரும், அக்காய் SW-30 மொடல் இரு ஸ்பீக்கர்களும், எல்றெக் Eltec) SA-500 A, மொடல், அம்பிளிபயரும், நிவிக்கோ (Nivico) MSL-300 மொடல், Two-in-one, றுவிற்றருடன் கூடிய 12'' ஸ்பீக்கர்கள் பொருத்தப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட இரு பெட்டிகளும், ஒரு செற் கெற்போனும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ம. ஜெ. சண்முகம், 158, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7426. 7057

## வகுப்புக்கள்

G. C. E. O/L பரீட்சையில் விசேடசித்திபெறும்பொருட்டு சனி, ஞாயிறு வகுப்புக்கள் 18-9-77ல் ஆரம்பமாகின்றன. கட்டணம் ரூபா 5/-. பாடக் குறிப்புகளும் வழங்கப்படும். எமது ஒரேஒரு கிளை நிறுவனம் B. M. C. ஒழுங்கை, வெலிங்டன் சந்தி, மணிக்கூட்டுவீதி, தலைமை அலுவலகம்; யாழ். சட்டநிலையம், பிரதானவீதி, யாழ்ப்பாணம். 7051

## CLASSES

Rapid Revision classes for A/L April 1978 Exam. Science Subject only Classes Commencing - 9th Sept. 1977. Director, Science Centre, Karaveddy. 6997

## CLASSES

Rapid Revision Classes for H. N. C. E. & A. L. April 1978 Exam Arts & Commerce Classes commencing - 9th Sept 1977. Director, Modern Education Centre, Karaveddy. 6996

## வைத்தியம்

சிறுநீர் மஞ்சளாகவோ, சிவந்தோ, நிறம்மாறிப் போனுற் செங்கமாரி, கல்லீரலைப் பாதிக்கும் இந்நோய் முறிவுற்று முதிர்ந்சால் ஆபத்தானது. எந்நிலையிலும் இதனைக் குணப்படுத்திக் கைதேர்ந்தவர். சிறுபிள்ளைகள் வலி திரும்பீவராமற் குணப்படுத்துவார். காலவியல் தலையவியல், கபாலஇடி, சிரங்கு, குட்டம், தொய்வு,குன்மம், மாதவிடாய் கால வயிற்றுவலி, அற்புதமாகக் குணப்படுத்தப்படும். வைத்தியர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம், வங்களாவடி வேலணை. 6888

## மரண அறிவித்தல்
## த. சிவப்பிரகாசம்

சமூகசேவையாளர் திரு. தம்பிமுத்து சிவப்பிரகாசம் (கோலாலம்பூரில்) 15-8-77ல் காலமானர். இவர், சோதிநியாயதுரந்தர், (கோலாலம்பூர்). இரத்தினேஸ்வரி ஆகியோரின் தந்தையும், மகாதேவா (செய்தி உத்தியோகத்தர்) அவர்களின் மாமனுமாவார். 15-9-77 சித்தங்கேணியில் அன்னரது அந்தியக்கிரியைகள் நடைபெறும். 6994

## நாளை கூட்டம்

யாழ்ப்பாணம், ஞாயிறு நாட்டில் இடம் பெற்ற இனவாத சம்பவங்களினுல் நிலைபெயர்க்கப்பட்ட வித்தியோதய வளாக மாணவர்கள் நாளை திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் கூடுகின்றனர். (கெ)

# "குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரை வேலைக்குத் திரும்புவதில்லை"

## தமிழ் நில அளவையாளர் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஞாயிறு நில அளவையாளர்கள் மிகவும் பின்தங்கிய இடங்களில் அதிக தொடர்புகள் அற்ற பகுதிகளில் சேவையாற்றுவதாலும் ஆயிரக்கணக்கான ரூபாய உபகரணங்களை தாம் வைத்திருப்பதாலும் அரசாங்கப் பொருட்களுக்கு பொறுப்பானவர்களாக சேவையாற்ற வேண்டியுள்ளது. கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் வருபவர்களின் கையில் சிக்கி இனவாத சம்பவங்களுக்கு இலக்காவர்கள் தமிழ் நிலஅளவையாளர்களே இவர்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலை அவசியமாகின்றது. எனவே சமீபத்திய வன்செயல்கள் சம்பந்தமான விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டிக்கப்படும் வரை தாம் வேலைக்கு செல்வதில்லையென நேற்று முன்தினம் கூடிய பாதிக்கப்பட்ட தமிழ் நிலஅளவை ஊழியரின் நிலைகுறித்து ஆராயப்பட்ட மேற்படி கூட்டத்தில் ஏகமனதாக இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டம் யாழ். வை. எம். சி. ஏ. மண்டபத்தில் திரு. க. சி. சந்திரசேகரம் தலைமையில் நடைபெற்றது. பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்கத்தின் தலைவர் டாக்டர் கே. பாலசிங்கமும் கலந்து கொண்டார்.

இக்கூட்டத்தில் திரு சந்திரசேகரம் கூறிதாவது சுமார் 50,000 ரூபாய் பெறுமதியான அரசாங்க உடமைகளை நில அளவையாளர்கள் தம்முடன் வைத்திருப்பதால் கொள்ளையடிக்கும் நோக்கத்துடன் வருபவர்களிடம் இலகுவில் சிக்கித்தவிக்க வேண்டியிருப்பதால் பாதுகாப்புப்பற்றி அதிகம் சிந்திக்க வேண்டியுள்ளது.

தாய் சங்கத்தின் தலைவர் பேசுகையில் கிளைச்சங்கங்கள் தாய்ச்சங்கத்தின் தீர்மானத்திற்கமைய கட்டுக்கோப்பாக நடந்து கொள்ள வேண்டுமெனக் கேட்டுகொண்டார்.

கணக்காய்வு திணைக்களத்தின் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் கழகத்தின் தலைவரும் தொழிற்சங்க வாதியுமான திரு. எஸ். இரத்தினசபாபதி பேசுகையில் அரசாங்கம் பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களை நிலைமை சீராகிவிட்டதென மீண்டும் வேலை செய்த இடத்துக்கு திரும்புமாறு கோரிக்கை விடும்போது வடக்கேயிருந்து எந்தவித அசம்பாவிதமுமின்றி தெற்கே திரும்பியவர்கள் இன்னும் திரும்பவும் வராதது தமக்கு விளங்கவில்லையென கூறினுர். தமிழ் ஊழியர்கள் பாதுகாப்புப்படையினரின் முன்னரே தாக்கப்பட்டமையினுலே அவர்கள் தமது உயிரின் மீது அச்சம் கொண்டு செல்லத் தயங்குகிறுர்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

புகையிரதப்பகுதி பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர்களின் சங்க தலைவர் திரு. கே. எஸ். ஆறுமுகம் பேசுகையில் பல புகையிரத நிலைய அதிபர்களும், ஊழியர்களும் உடமையில் இருக்கும் போதே வன்செயல்களுக்கு பலியானுர்கள் என்றும் இந்தநிலையில் எப்படித்திரும்பமுடியும்? என கேட்டார். (கெ)

## லைசென்ஸ் செல்லாது

யாழ்ப்பாணம் ஞாயிறு உள்நாட்டு பொதுநிர்வாக அமைச்சின் விசேட அறிவித்தற்கமைய சென்றமாதம் 24-ந் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட துவக்கு லைசென்ஸ் அனைத்தும் யாழ்மாவட்டத்தில் செல்லுபடியாகாதென யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஏ. ஏ. யோசப் அறிவித்துள்ளார்.

துவக்குகளை வைத்திருப்பவர்கள் தமது துவக்குகளை அண்மையில் உள்ள பொலிஸ் நிலையங்களில் செலுத்தி ரசீதுகளைப் பெறுவதற்கான கடைசித்தினம் நேற்ருகும். அமைச்சினுல் வெளியிடப்பட்ட அறிவித்தலுக்கமைய துவக்குகளுக்கு லைசென்ஸ் பெற்றவர்கள் திருப்பி ஒப்படையாவிடில் அவர்கள் மீது சட்டபூர்வமாக வழக்குத் தொடரப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (கெ)

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் பிங்கள ஆண்டு ஆவணித் திங்கள் 29 ஆம் நாள்(14-9-77)புதன்கிழமை காலை 8-28—10-04 வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்

| | |
|---|---|
| எமது புத்திரன்<br>திருநிறைசெல்வன்<br>குலசிங்கம்<br>அவர்களுக்கும்<br>(பட்டணசபை, சுன்னுகம்) | எமது புத்திரி<br>திருநிறை செல்வி<br>புவனராணி<br>அவர்களுக்கும் |

திருவருள் நலத்தினுல் மணமகள் இல்லத்தில் திருமணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அவ்வமயம் தாங்கள் குடும்ப சகிதம் சமூகந் தந்து புதுமணத்தம்பதிகளை ஆசிர்வதிக்கும்வண்ணம் அன்புரிமை தழுவிவேண்டுகிறேம்

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்

ந. செல்லத்துரை தம்பதிகள்
நவக்கிரி,
புத்தூர்

ச. பொன்னையா தம்பதிகள்
'இராணி இல்லம்,'
சங்கத்தானை, சாவகச்சேரி. 7050

## கழிவுப் பொருளுக்குக காசு

உங்கள் வீட்டின் சமையலறையில் பிழிந்த தேங்காய்ப் பூவை நன்கு காயவிட்டு உலர்த்தித் தந்தால் நாங்கள் இருத்தல் ஐந்துசதமாக விலை கொடுத்துவாங்குவோம்.

### மல்ரி ஓயில் இண்டஸ்ரீஸ் லிமிடெட்

இணுவில்

மல்ரி ஷொப்
No. 23,
மத்தியசந்தை, சுன்னுகம்.

அண்ணு கோப்பிக்கடை
No.4, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

## POST OF ACCOUNTANT

Chankanai M.P.C.S. Ltd., Chankanai requires the services of an Accountant with following qualifications.

Age Limit: Between 23 — 45 years

Qualifications: Pass in one of the following examinations;

1) Chartered Intermediate Examination,
or 2) Cost and Management Part I, II & III,
or 3) Institute of Certified Accountants Part I, II & III,
or 4) Diploma in Accountancy of the Senior Technicial College Colombo,
or 5) B. Com. Degree,
or 6) A degree with Accountancy as a subject,
or 7) Government Accountant,

Experience: Minimum 3 years experience is essential.

Salary: Negotiable.

All applications must be sent to the President Chankanai MPCS Ltd., Chankanai, on or before 24-09-77, under registered cover. 7041

## விலைக்குறைப்பு

ஜீவனு போட்டோ சாவகச்சேரி

புகைப்படச் சாதனங்களின் விலைக்குறைப்புக்கு இணங்க சாவகச்சேரி ஜீவனு போட்டோ ஸ்தாபனத்தார் தங்கள் புகைப்படக் கட்டணங்களை கீழ்வரும் வண்ணம் குறைத்துள்ளார்கள் என்பதை அறியத்தருகின்றேம்.

| அளவு | முன்னைய விலை | பிரதிகளின் எண்ணிக்கை | தற்போதைய விலை | பிரதிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| பாஸ்போட் அடையாள அட்டை | 7-00 | 3 | 6-50 | 2 |
| போஸ்காட் | 14 00 | 3 | 12-50 | 2 |
| கபினட் | 35-00 | 3 | 27-50 | 2 |
| 8X6 (புல் பிறேட்) | 50-00 | 3 | 40-00 | 2 |
| 12X10 | 75-00 | 3 | 50-00 | 2 |

7047 ஜீவனு போட்டோ ஸ்தாபனத்தார்

## செல்வம், அந்தஸ்து, பகட்டான வாழ்வு இதைமட்டும்தான் ஒரு பெண் தன் கணவனிடம் எதிர்பார்த்தால் மணமகளுக்கும் விலைமகளுக்கும் வித்தியாசம் என்ன? எல்லாவற்றுக்கும் மேலாக அவள் எதிர்பார்ப்பது......?



# என் மனைவி சாப்பிட அழைக்கிறாள்!

க. கஜன்

அங்கனே இல்லாத அமைதியான கடல். அந்த அமைதியே எனக்கு வெறுப்பாக இருக்கின்றது. கரைக்குத் திரும்பவேண்டிய நேரம் வந்துவிட்டதை கரையை நோக்கிப் பறக்கும் பறவைகள் கூட்டம் உணர்த்துகின்றது. என்ன இன்பமான வாழ்க்கை அந்தப் பறவைகளுக்கு; சுதந்திரப் பறவைகள். நேற்று என்ற எண்ணமும் இல்லை; நாளை என்ற கவலையும் இல்லை, இன்றைய பொழுது கழிந்தால் சரி. எவ்வள அருமையான அமைதியானவாழ்க்கை. அந்தப் பறவைகள் போல வாழ நமக்குக் கொடுத்து வைக்கவில்லையே... ம்......!

வெறுப்புடன் மீண்டும் வலையை வீசுகிறேன். ஆண்டவனே இதுதான் நான் வீசும் கடைசி முறை. வீட்டில் இரண்டு உயிர்கள்; நான் மூன்றாவது உயிர். இன்றைய பொழுதைப் போக்கவாவது ஏதாவது பிடிக்கத்தான்வேண்டும் அல்லது இன்று பட்டினி தான்.

அனு. சோபனாவின் கையைப் பிடித்தபடியே இருப்பாள். இருவரும் கடலைப் பார்த்தவண்ணமே இருப்பார்கள். கணவனுக்காக ஏங்கும் உள்ளம் ஒன்று; ''தந்தை எங்கே, எங்கே'' என்று கேள்விகள் கேட்டு அன்னையைப் படாதபாடுபடுத்தும் பிஞ்சுஉள்ளம் ஒன்று. சோபனா என் மனைவி என்று சொல்வதில் எனக்குப் பெருமைஉண்டு. படித்தவள்- பண்புள்ளவள்- அழகுள்ளவள் என்று எத்தனையோ பட்டங்கள் நம் சுற்றாடலில் வாங்கியிருந்தாள். ஆனால் தன் கணவன் என்று பெருமைப்பட அவளுக்கு என்னிடம் என்ன இருக்கின்றது! பள்ளிக்கூட வாசனைகூட என்னிடம் கிடையாது. நாலு பேர் பார்க்கவசதியாக அவளை வைக்கமுடியாத கணவன் நான். எத்தனைபேர் சோபனாவை முடிக்கத் தவம் கிடந்தார்கள். அவள் மட்டும் என் சொல்லைக்கேட்டு வேறு எவனையாவது கட்டியிருந்தால் எங்கோ ஒரு மூலையில் நிம்மதியாக வாழ்ந்திருப்பாள். பாவம்! அவள் சேற்றில் வேண்டும் என்றே இறங்கி விட்டாள்; இன்று அவள் மனதில் வேதனைப்படுகிறாளா? தெரியவில்லை, அந்தக் கேள்விக்குத்தான் இன்னும் விடை கிடைக்கவில்லை.

அனுவின் பெயரை மனதில் உச்சரித்துக்கொண்டு வலையை இழுக்கிறேன். எந்தவித பாரமும் தெரியவில்லை. மேலே மேலே வலை வருகின்றது. வலைமட்டும்தான் வருகின்றது; வேறு ஒன்றும் இல்லை. கூடையைப் பார்க்கின்றேன் வீட்டுத் தேவைக்குத்தான் இருக்கின்றது, விற்பதற்கு ஒன்றும் இல்லை. அரிசிவாங்க ? மாதா கோவில் உண்டியலுக்கு? எல்லாம் கேள்வியாக மட்டும் தான் இருக்கின்றது. விடைகள் எப்போது கிடைக்குமோ. நம் வாழ்க்கையே ஒரு கேள்விக்குறிதானா?

எனக்கொரு குடும்பம், ஒரு வாழ்க்கை; ஏன்தான் பிறந்து தொலைத்தேனோ! தோணியை திருப்புகிறேன், கரையை நோக்கி. விரைகிறது தோணி. மாலைநேரத்து வெய்யில் முதுகில் 'சுள்'ளென்று உறைக்கின்றது. உடலெல்லாம் ஒரே அசதி, கரைக்குப் போனதும் கொஞ்சம் கள்ளு ஊற்றினால் தான் ஒருமாதிரி இருக்கும். ஆனால் அரிசிக்கே பிரச்னையாய் இருக்கு, கள்ளுக்கு எங்கே போவது? இந்தச் சனியனை இன்றோடு விட்டுத் தொலைக்கவேணும், இனி மேல் கள்ளுக்கடைப் பக்கம் தலைகாட்டக்கூடாது. பெண்டாட்டி பிள்ளைகளுக்குச் சோறுபோட தகுதியில்லை; கள்ளு என்ன வேண்டியிருக்கு. எவ்வளவு சுயநலப் பிசாசு நான். சுரைக்குடுவைக்குள் இருந்த தண்ணீரை ஊற்றுகிறேன். தண்ணீரும் முடிந்து விட்டது. இனி வீட்டை போகலாம்தானே; இல்லாவிட்டிலும் பறவாயில்லை, தோணி கரையைநோக்கி விரைகிறது.

'அப்ப கலியாணம் இவ்வளவு பிரச்சனை என்பது தெரிந்திருந்தால் தனிக்கட்டையாக இருந்திருக்கலாம். கடைசி வரைக்கும் கலியாணம் செய்திருக்கவேமாட்டேன். அநியாயமாகச் சோபனாவின் வாழ்க்கையையே நாசமாக்கிப்போட்டேன். அந்தச் சனியனிடம் அப்ப சொன்னேன். கேட்டாளா?'

'முடிச்சால் உன்னை முடிக்கிறது. இல்லாவிட்டால் கடலில் குதிக்கிறேன்' என்றாள். இப்ப அவளுக்குத் தெரியும் குடும்பம் என்றால் என்னஎன்று. அதுவும் என்னைப்போல ஒருத்தனைக் கட்டினால் எவ்வளவு பிரச்சனை என்று. அந்தப் பள்ளிக்கூடத்தில் படிப்பிக்கிற வாத்தியார்ப் பெடியன்கூட இவளை முடிக்க எவ்வளவு ஆசைப்பட்டான். அவனை முடித்திருந்தால் இன்றைக்கு எவ்வளவு சந்தோஷமாய் இருந்திருக்கும். வீடென்ன; வாசல் என்ன? விடுதலை நாளில் கொழும்புக்குச் சும்மா போய் வரலாம். காசு, செயினுக்குக் கொடுக்கத் தேவையில்லை. பெடியனுக்கு ஒரு குறையும் இல்லை. என்னை மாதிரிக் குடிக்கிறவனா? அதுவும் இல்லை. மாதா கோவிலுக்கு வரும்போது என்ன மாதிரி உடுத்துக்கொண்டு, மோட்டார் சயிக்கிளில் வந்து போறான், பின்னால் பெண்டாட்டியையும் கூட்டிக் கொண்டு. எதுக்கும் குடுத்து வைக்கவேண்டும். சுய புத்தியும் இல்லை; சொல்பவர் மதியையும் கேட்பதில்லை; பிடிவாதம் பிடித்தவ. இப்ப கொட்டில் வீட்டுக்கை அடுப்பூதும்பொழுது தெரியும், நான் சொன்னது எவ்வளவு தூரம் என்று.'

'அலைகள் மோதுகின்றன, தோணியை இழுத்துக் கட்டவேணும். கரையில் ஒருத்தரும் இல்லைப்போலிருக்கு; சோபனாவைக் கூப்பிடட்டோ, வேண்டாம். பாவம் என்ன செய்து கொண்டிருக்கிறாளோ தெரியாது. ஏன் வீண் சிரமம் கொடுப்பான்? ஒரு மாதிரித் தோணியைக் கட்டி முடித்துவிட்டு வீட்டை நோக்கி நடக்கிறேன். மணல் இன்னும் சுட்டபடிதான் இருக்கிறது. அதோ என் அரண்மனை. கிடுகால் அடைக்கப்பட்ட சுற்றுமதில், மூங்கில் தடியும் கிடுகும் கொண்டு அடைக்கப்பட்ட மாடமாளிகை கூடகோபுரம். ஒரு புயல் அடிச்சால்சரி, எல்லாம் கடலுக்குள்தான் கிடக்கும். வீட்டுக்குள் நுழைகிறேன்; அனு சாப்பிட்டுக்கொண்டிருக்கிறாள். மெதுவாக உள்ளே போகிறேன். சோபனா அங்கில்லை. என்னை ஒருவரும் காணவில்லை என்று எனது எண்ணம். ஆனால் ''அம்மா அப்பா வந்தாச்சு'' என்று அறிவிப்புப் பறக்கின்றது, அனுவிடமிருந்து. இனி அடுத்த பிரச்சனையைச் சோபனாவுக்குச் சொல்லவேண்டும், இன்று தொழில் சரிவரவில்லை என்று. எங்கே சோபனா இன்னும் வரவில்லை. மெதுவாக அனுவை நெருங்குகிறேன். குனிந்து ஒரு முத்தம் கொடுக்கிறேன் கண் கலங்குகிறது எனக்கு இதைவிட வேறு எதைப் பெரிதாக அவளுக்கு என்னால் கொடுக்க முடிந்தது?

''அனு, அம்மா சாப்பிட்டாச்சா'' ''இல்லை இப்பதான் குழாய்க்குத் தண்ணி எடுக்கப் போனவ, நான நினைத்தேன் வந்திட்டாளாக்கும் என்று.'' நான் சோற்றுப் பானையைப் பார்க்கிறேன். ஒரு ஆளுக்கு மட்டுந்தான் இன்னும் இருக்கு. இன்று மட்டும் அரிசி வேண்டாமல் சமாளிக்கலாம். நாளை விடிந்தால் ஒருவேளை வீட்டுக்கு விடிவு வரலாம். வாசலில் சத்தம் கேட்கிறது சோபனா தண்ணீர் கொண்டு வருகிறாள்.

''அனு அப்பா வந்திட்டாரா?''

''ஓம் அம்மா, இப்பதான் வந்தவர்.''

''ஏன் இன்றைக்குப் பிந்திப் போயிட்டுது? நான் எவ்வளவு நேரம் கரையில் வந்து காத்துக்கொண்டு நின்றனான் தோணி கட்டவேண்டும் என்று, கட்டிப்போட்டீங்களோ?'' கேள்விகள் ஒன்றன் பின் ஒன்றாகப் பாய்ந்துவருகின்றன.

''சோபனா, இன்று ஒண்டும் சரிவரவில்லை. இந்தா இவ்வளவு தான் கிடைச்சுது. எங்களுக்குக் காணும்.''

''ஐயோ! அதுக்கேன் இப்பிடிக் கவலைப்படுவான். இண்டைக்கு ஒருத்தருக்குந்தான் சரிவரவில்லை. சந்தியில் எத்தனை பேர் ஏமாற்றத்துடன் போகினம், வந்தவை. அதை விட்டிட்டு வாங்கோ சாப்பிட. குழாயிலை நல்லாய்த் தண்ணி வருகுது. போய்க் கெதியிலைகுளிச்சிட்டு வாங்கோ நான் மீனைப்பொரிக்கிறேன்.''

''சோபனா நான் சாப்பிட்டு விட்டேன். எனக்காகக் காத்திராமல் சாப்பிடு. நான் குளிச்சிட்டு வாறன்.''

''எங்கை சாப்பிட்டனீங்கள்?''

''வாற வழியில் தங்கச்சி வீட்டை போனனான், விடாப்பிடியாக நின்டாள், சாப்பிட்டிட்டேன்.''

''நான் ஒருத்தி பசியோட கடலையே பார்த்துக்கொண்டு இருக்கிறேன், எப்ப வருவீங்கள் என்று. நீங்கள் என்னை விட்டிட்டு மனம் வந்துதானே சாப்பிட்டனீங்கள். மோகம் முப்பது நாள், ஆசை அறுபது நாள் என்டது எவ்வளவோ உண்மை.''

''நீ இப்பிடிக் கத்து. அவள் சாப்பிடாட்டி, பெண்டாட்டி வந்தால் காணும், அண்ணன் தங்கையை மறந்திட்டான் என்பாள். ஆருக்கு நான் குடை பிடிக்கிறது. உனக்கோ அவருக்கோ. எதுக்கும் மீனைப் பொரி. நான் குளிச்சிட்டு வாறன்.''

அங்கையும் சனம் நிக்குமோ தெரியாது. எல்லாரும் இப்பதானே குளிக்கினம். அட, கொஞ்சம் கள்ளு ஊத்தினால் சாப்பிடாமல் படுத்திடலாம் காசுக்கு எங்கே போவது? இன்டைக்கு நான் சாப்பிடப்படாது. பாவம் அவளைச்சாப்பிடப் பண்ணவேணும். பாவம் பசியோடை கிடக்கிறாள். நான் சாப்பிடாட்டி வெட்டிப் போட்டாலும் சாப்பிடாள். நான் சொன்ன பொய்யை நம்பினாளோ தெரியாது. எனக்கென்ன சாப்பாடு. பெண்டாட்டியைப் பட்டினி போட்டிட்டு நான் மட்டும் சாப்பிடுவனேன் இன்டைக்கு எப்பிடியும் அவளைச் சாப்பிடப் பண்ணவேணும். நல்லவேளை குழாயடியில் சனம் இல்லை. நிம்மதியாகக் குழாய்க்குக் கீழே போய் இருக்கிறேன். குளிர்ந்த நீர் உடலில் படும்போது ஒரு தனி சுகந்தான்.

அப்பாவும் அம்மாவும் எங்கள் இருவரையும் அனாதையாக விட்டுவிட்டுச் சென்ற பழைய நினைவுகள் என் மனதில் இழையோடுகின்றன.

பாவம் மாமாதான் எங்களைச் சுமக்கத் தொடங்கினார். அவருக்கும் மனைவி இல்லை. சோபனா மட்டுந்தான் அவர் வாரிசு. நானும் மாமாவும் கடலுக்குப் போவம் தங்கச்சி சமைப்பாள். சோபனா மட்டும் படிக்கவேண்டுமென்று பிடிவாதமாகப் பள்ளிக்கூடம் போனாள். மாமா உயிரோடு இருக்கும்போதே என் தங்கச்சியை ஒரு நல்ல இடத்தில் கட்டிக் கொடுத்திட்டார். கடைசி நேரம் என்னிடம் சோபனாவின் பொறுப்பை விட்டார். அவர் சொன்ன கடைசி வார்த்தைகள்; ''சோபனாவை நீ முடித்தால எனக்கு எவ்வளவோ மன நின்மதி, அதுக்காக நீ விரும்பாவிட்டாலும் எனக்காக முடித்து உன் வாழ்க்கையைப் பாழாக்காதே. நான் இல்லாவிட்டால் நீ அவளிற்குத் தந்தைபோல் இருந்து நல்ல இடத்தில் முடித்து வை இது தான் நீ எனக்குச் செய்யும் ஆத்மசாந்தி''. அவரின் கடைசி ஆசையை நான் நிறைவெற்றினேனோ தெரியவில்லை. சோபனா எவ்வளவு நல்லவளாக இருந்தும், எனக்கு அவளை முடிக்கத் தயக்கமாக இருந்தது. காரணம் எனக்குள்ளேயே ஒரு தாழ்ந்த மனப்பான்மை. அவளுக்கு நான் சரியான கணவன் இல்லை. ஆணுக்கு அழகு மட்டும் இருந்துவிட்டால் போதுமா? கொஞ்சமாவது படித்திருக்க வேண்டும். மாதா கோவிலில் அன்று ஒரு பெரியார் பேசினரே ''ஆணுக்கு அழகு அவைதனில் சரியாசனம்''. சோபனாவை எவ்வளவோ கேட்டுப் பார்த்தேன். யாரையாவது நல்ல உத்தியோகத்தில் இருப்பவனை முடிக்க வேண்டும் என்று. அவள் தலைவிதி அவளை விடவில்லை. இறுதியில் என்னை முடித்து விட்டாள். இப்ப அவள் இன்பமாக இருக்கிறாளா? இது ஒரு பெரும் கேள்வியாகஎன் நெஞ்சைப் பிழக்கிறது இதுக்கு மட்டும் விடை தெரிந்துவிட்டால் கொஞ்சம் நிம்மதி. என்னை எதுக்காக மணந்து கொண்டாள் சோபனா? மாமாவின் கடைசி ஆசையை நிறைவேற்றுவதற்காகவா தன் மீது சேற்றைப் பூசிக்கொண்டாள் அப்படிச் செய்திருந்தால் சோபனா பெரும் தவறுஒன்றைச் செய்து விட்டாள்.

அனு முற்றத்தில் விளையாடிக்கொண்டு நிற்கிறாள். குளித்து விட்டு வீட்டை நோக்கி நடக்கிறேன். வீட்டு வாசலில் சோபனா நிற்கிறாள். ''வாங்கோ சாப்பிட'', ''எத்தனைதரம் சொல்லவேணும். நான சாப்பிட்டுவிட்டேன் என்று''. ''முழுப்பொய்''. ''எதுபொய்''. தங்கச்சி வீட்டுக்குப் போனதும் பொய் அங்குசாப்பிட்டதும் பொய்''. ''நான் உனக்கு பொய் சொல்வேனா சோபனா'' அவள் கண்களில் நீர் உருண்டோடுகிறது ''நீங்கள் இப்ப சொன்னதும்பொய்''; திகைக்கிறேன் நான். ''உங்கள் தங்கையின் கணவர் வந்துட்டுப் போனார் இப்ப, எனக்கு எல்லாம் புரிந்துவிட்டது.''

எப்படிச் சமாளிப்பது, ''சரி சரி எனக்குப் பசிக்கவில்லை நீ போய்ச் சாப்பிடு'' அவளைத் தாண்டி நழுவப் பார்க்கிறேன் அவளோ குறுக்கே வந்து நிமிர்ந்து நிற்கிறாள்.

''ஏன் பசிக்கவில்லை என்று எனக்கு தெரியும். பானையைப் பார்த்திருப்பீர்கள். அங்கு சோறு காணாது. பெண்டாட்டி சாப்பிட்டால் போதும் நீங்கள் பட்டினி கிடக்கவேணும்; இதுதானே உங்கள் எண்ணம்'' நான் தலைகுனிந்து நிற்கிறேன். இப்ப வந்து பானையைப் பாருங்கோ பானை நிறைய சோறு இருக்கு'' நான் தலை நிமிர்த்துகிறேன், ஆச்சரியத்துடன் 'அரிசி வாங்க காசு எங்காலை'' ''எப்படியோ வாங்கினேன்'' ''அது எப்படி என்றுதான் கேட்கிறேன். பிச்சை எடுத்தியா? கடன் வாங்கினியா? களவெடுத்தியா? இந்த மூன்றுமே எனக்குப் பிடிக்காது என்று தெரியுமல்லவா உனக்கு!'' ''மூன்றாவதுதான்'' ''களவெடுத்தேன்'' திகைப்புடன் அவளைப் பார்க்கிறேன். ''சோபனா நீ என்ன சொல்கிறாய்; கொஞ்சம் விளங்கச் சொல்லேன்''. 'மாதாகோவில் உண்டியலில் இருந்து களவெடுத்தேன்''. ''சோபனா எவ்வளவு பெரிய பாவத்தை செய்திட்டாய். கேவலம் ஒரு சாண் வயிற்றை வளர்க்க கோவிலுக்குப் போட்டுவைத்த பணத்தையா எடுத்தாய். நீ படித்த படிப்பெல்லாம் இது தானா மாதா கோபம் உன்னைச் சும்மா விடாது''

அவள் கேட்கிறாள்! ''எது பாவம், நீங்கள் பட்டினி கிடக்க நான சாப்பிடுவது பாவம் இல்லை என்று நீங்கள் நினைக்கலாம் ஆனால் நான் அப்படி நினைக்கமுடியாது. நீங்கள் பட்டினி கிடக்க உங்களை வருத்தி மாதாகோவிலுக்குக் கொடுக்கவேண்டும் என்று எனக்கு விருப்பமில்லை. மாதாவும் விரும்பமாட்டாள். படுக்கப்போகுமுன்பு நான் எப்படி ஜெபம்பண்ணுவேன் தெரியுமா. ''அம்மா உங்கள் கருணையால் இன்று இந்த குடும்பம் பசி கிடக்காமல் இன்பமாக இருக்கின்றது. இன்றுபோல் நாளையும் விடியவேணும், ஒவ்வொருநாளும் விடியவேணும்'' இப்படித் தான் நான் மாதாவை தினமும் வேண்டுகிறேன். இப்ப என்ன அப்படி நடந்து போச்சு, நாளைக்கு ஒருவேளை நீங்கள் கூட உழைக்கலாம், அப்ப நான் இந்த காசையும் சேர்த்து உண்டியலில் போட்டுவிடுவேன்.''

நான் மௌனமாகச் சிந்திக்கிறேன். சோபனா படித்

(7-ம் பக்கம் பார்க்க)



## கலாயோகியின் வாழ்க்கையும்பணிகளும் -4

# யாழ்ப்பாணத்தில் ஆனந்தகுமாரசுவாமி

இலங்கை சமூக சீர் திருத்தச் சபையின் கிளையொன்றை யாழ்ப்பாணத்தில் தாபிக்கும்பொருட்டு ஆனந்த குமாரசுவாமியும் அவர்மனைவி எதெல் குமாரசுவாமியும் 1906-ம் ஆண்டு மே மாதம் 28-ம் திகதி முதன்முறையாக யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். இவர்களை வரவேற்கும் முகமாக 1906-ம் ஆண்டு மே மாதம் 30-ம் திகதி வெளிவந்த ஆங்கில இந்துசாதனத்தில் பின்வருங்கட்டுரை வெளிவந்தது. இதில் அவருடைய குடும்பத்தின வரலாறும் அவர் இலங்கைக்குச் செய்த சேவையும் தெளிவாகவும், விரிவாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதால் அதன்மொழிபெயர்ப்பை இங்கு தருகின்றேன்.

''இம்மாதம் 28-ம் திகதி காலை இங்கு வந்து சேர்ந்த டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி அவர்களுக்கும் அவருடைய பாரியாருக்கும் நல்வரவு கூறுகின்றோம் டாக்டர் ஆனந்த குமாரசுவாமி அவர்களை நேர்முகமாக அனேக யாழ்ப்பாணத்தவர் அறியாதிருந்தபோதிலும் அவரைப்பற்றியும், அவர் ஆற்றியிருக்கும் பணிகளைப்பற்றியும், அவருக்கு ஏற்பட்டிருக்கும் கீர்த்தியைப்பற்றியும் அறியாத தமிழர் ஒருவரும் கிடையாது என்று கூறுதல் மிகையாகாது. அவர் கொண்டிருக்கும் பெயர் இந்தியாவில் மிகவும் கீர்த்திவாய்ந்தது. அவருடைய குடும்பம் மிகவும்புகழ்பெற்றதாகும் அவருடைய பாட்டனரானகுமார சுவாமிமுதலியாரும் தகப்பனரான சேர் முத்துக்குமார சுவாமியும் தமிழ்ப் பிரதிநிதிகளாகச் சட்ட நிருபணசபையிலிருந்தனர். 'சொலிசிற்றர் ஜெனரல்', பதவியில் நெடுங் காலமிருந்து மூன்றுமுறை 'அற்றேணி ஜெனரலாக' கடமையாற்றியவரான திரு. பொன். இராமநாதனவர்களும் தமிழ்ப் பிரதிநிதியாக விளங்கிய திரு. பொ. குமாரசுவாமி அவர்களும் அவருடைய மைத்துனர்களே. 'சிவில் சேவிஸ்' உத்தியோகத்தில் மிகவும் புகழ்படைத்து இப்பொழுது 'றிஜிஸ்தார் ஜெனரலாக' விருக்கும் கனம் பொ. அருணசலம் அவர்களும் அவருடைய மைத்துனரே. தமிழருக்குள்ளாயினும் மறு சாதியினருக்குள்ளாயினும் இப்படிப் புகழ்படைத்த குடும்பத்தைக்காணமுடியாது. இந்தப் பிரபல்யமடைந்த குடும்பத்தைச் சேர்ந்தவரென்றமுறையிலே அவர், இலங்கை மக்கள் பாராட்டுதலுக்கும் சிறப்பாக யாழ்ப்பாண மக்கள் பாராட்டுதலுக்குமுரியவர். ஆனல் பிறப்பினல் மாத்திரம் நமது பாராட்டுதலுக்குரியவரல்லர். இலங்கை மக்கள் முன்னேற்றத்திற்காக அவர் செய்து வரும் பணிகளையாவருமறிவர். அவர் இலங்கைக்குவந்த காலந் தொடங்கி இலங்கை மக்களின் பொருளாதார, சமூக, கலாச்சார வளர்ச்சிக்காக இந்நாட்டிற் பிறந்து வளர்ந்தும்,இந் நாட்டிலேயே கல்வி பயின்றும் நாட்டு மக்களுக்குச் சேவை செய்வதற்கு டாக்டர் குமாரசுவாமி அவர்களுக்கில்லாத பல வசதிகளிலிருந்தும் ஒரு விதமான சேவையும் செய்யாத இலங்கை வாசிகள் நாணும்படி தொண்டாற்றியுள்ளார். இது நாம் ஒன்றையும் ஒழிக்காது மறைக்காதும் கூறும் அபிப்பிராயமாகும். இந்த அபிப்பிராயமே தன்னல மற்ற சகலரின் அபிப்பிராயமாகும், மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுதல் தேசாபிமானத்துக்குப் பங்கம் விளைவிப்பதோடு இலங்கை மக்கள் பொருளாதார நிலைக்கும் பங்கம் விளைவிப்பதாகும். சிங்களர், தமிழர் வாழ்க்கைமுறையில் மாற்றம் ஏற்படவேண்டுமென்று முதன்முதற் பிரசாரம் செய்தவர் இவரே. இந்நிலையில் அன்னரின் தகப்பனரைப்பற்றிச் சில வார்த்தைகள் கூறுவது பொருத்தமானது. கீழைத்தேச வாசிகளில் முதற் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றவரும் அவருடைய தந்தையாரே. அக்காலத்தில் கிறிஸ்தவர்களுக்கும்யூதர்களுக்குமே 'பாரிஸ்டர்' பட்டம் வழங்கப்படவேண்டுமென்று சட்டம் கதிமையாக இருந்தது. சேர் முத்துக்குமாரசுவாமிக்கு இங்கிலாந்திலிருந்த செல்வாக்கின் பயனகவே இச்சட்டம் தளர்த்தப்பட்டுப் பின்னர் மறுசமயத்தவரும் 'பாரிஸ்டர்' பட்டம் பெறமுடிந்தது. இங்கிலாந்தில் குறிக்கப்பட்ட காலம் வசிக்காது முதன்முதல் 'பாரிஸ்டர்' பட்டம் பெற்றவர் இவர் மைத்துனரான பொன்.இராமநாதனகும். இவருக்கு ஒரு நாளிலேயே பட்டம் வழங்கப்பட்டது. இவரைப்போல் சன்மானிக்கப்பட்ட இருவருள் ஒருவர் பிரபல அமெரிக்க நியாயவாதி, மற்றவர் பிரத்தானிய இராசவம்சத்தைச் சேர்ந்தவர்.



### வரவேற்பு

1906-ம் ஆண்டு யூன் மாதம் 4-ம்திகதி மாலை 7-30 மணிக்கு டாக்டர் ஆனந்தகுமாரசுவாமிக்கும் அவருடைய மனைவியாருக்கும் இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஒரு வரவேற்பளிக்கப்பட்டது. தமிழ்ப் பிரதிநிதி அ. கனகசபை தலைமை வகித்தார். பெரிய கோட்டுச் சக்கடத்தார் தி. கந்தையா விருந்தினருக்கு மாலைசூட்டினர். கனம் கனகசபை முன்னுரையாகச் சில வார்த்தைகள் கூறிய பின் முடிக்குரிய வழக்கறிஞர் ரி. சி. சங்கரப்பிள்ளை ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்தார். அதற்கு விடையிறுக்கும்முகமாக டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினர். அதன் சாரம் வருமாறு:

''எங்கள் பாஷையாகிய தமிழில் நான் பேசமுடியாமலிருப்பதை மன்னிக்கும்படி முதலாவதாக உங்களைக்கேட்டுக்கொள்ளுகிறேன் பல சந்தர்ப்பங்கள் என் வாழ் நாட்களிற் பெரும்பாகத்தை இங்கிலாந்திற் கழிக்கச் செய்துவிட்டன எதிர்காலத்திலும் அப்படித்தான் போலிருக்கிறது. இதனல் எனது சொந்தப் பாஷையை பேசமுடியாதவனயிருந்தபோதிலும் தமிழர் அந்தப் பாஷையைப் படிக்கவேண்டிய அவசியத்தையும் அதன் சிறப்பையும் நான் நன்குணர்ந்திருக்கிறேன். எங்கள் சொந்த இலக்கியங்களைப் பெரும்பான்மை மொழிபெயர்ப்பிலும் சிறுபான்மை மூலத்திலும் படித்துள்ளேன். என்னுடைய பெருவிருப்பம் நீங்கள் என்னை உங்களில் ஒருவனக ஏற்கவேண்டுமென்பதே, ஆகையால் நீங்கள் என்னை ஒரு தமிழனகவும் நண்பனகவும் ஏற்றிருப்பதற்காக உங்களுக்கு எனது நன்றியைத்தெரிவிக்கின்றேன் நான்கு வருடங்களுக்கு முன் நான் இலங்கைக்கு மூன்ருவது முறையாக வந்தபொழுது ஆங்கிலேயனகவே வந்தேன். இப்பொழுது நான் இந்தியத்தாயின் புத்திரனக மறுபிறப்பெடுத்து ஒரு குழந்தை தன் பெற்ருேரிடஞ் சேருகிறமாதிரி உங்களிடம் வந்துள்ளேன். என் வாழ் நாளிற் பெரும்பாகத்தை இங்கிலாந்திற் செலவழித்தபோதிலும் இங்கு வந்ததன்பின்

(7-ம் பக்கம் பார்க்க)

ச. அம்பிகைபாகன்

# புதியதோர் இலக்கியமரபை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

திட கண்ணனை பாரதி மீளவும் காவியம்பாடி அழைக்கின்றன் எனவே, விடுதலைக் களத்தின் காவல் தெய்வமாகத்தான் இறைவனைக்கூட அழைக்கின்றன். பாரதியின் சக்திவிண்ணப்பங்களில் சமுதாய உணர்வு மேலோங்கி நிற்பதை நன்கு காணலாம், எனவே பாரதி இறைவனை வெறும் கற்கோயில்களில் தேடாது உயிருள்ள மனித ஆலயங்களில் தேடி பக்தி உலகிலும் ஒரு புரட்சியைக் காட்டுகிறன்.

## பாரதியும் இயற்கையும்

பாரதி புரட்சிப் பாதையில் புதுமை நடையிட்டாலும் தமிழ்ப் புலவர்களின் தனித்துவமான கற்பனசக்தியும்இனிய தமிழ் நடையும் பாரதியுடனும் ஒட்டி உறவாடுவதைக் காணலாம். பாரதியின் இயற்கை வர்ணனைகளில் இன்பத்தமிழருவி பெருகி வருவதைக் காணலாம்.

''ஆசை பெற விழிக்கும்
மான்கள்-உள்ளம்
அஞ்சக்குரல்பழகும் புலிகள்-
நல்ல
நேசக் கவிதை சொல்லும்
பறவை-அங்கு
நீண்டே படுத்திருக்கும்
ஒரு பாம்பு.''

பாரதியின் காட்டு வர்ணனையில்கூட காவியநயம் துள்ளுவதைக் காணலாம்.

## பாரதியும் தமிழுணர்வும்

பாரதியும் தமிழும் உயிரும் உடலும்போல் இரண்டறக் கலந்து நின்றனர்கள். பாரதியின் நாவசைவில் தமிழ் களித்து நடம்புரிந்காள். பாரதியின் எழுத்தசைவில் அவள் இழந்த உரிமைபெற்றள்.

''யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழிபோல்
இனிதாவதெங்கும்
காணேம்
பாமரராய் விலங்குகளாய்
உலகனைத்தும்
இகழ்ச்சி சொலப் பான்மை
கெட்டு
நாமமது தமிழரெனக்
கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றே?
சொல்லீர்!
தேமதுரத் தமிழோசை
உலகமெலாம்
பரவும்வகை செய்தல்
வேண்டும்''

எனும் பாரதியின் பாடலிலே தமிழைப் போற்றுவதுடன் நின்றுவிடாது தமிழின் இன்றைய அவல நிலை போக்கிட அழைப்பு விடுவதையும் காணலாம்.

## ஒருரு

மொத்தத்தில் பாரதி ஒரு கவிதைக் களஞ்சியமாக திகழ்கின்றன். வள்ளுவனின் அறநெறியை அவன்அழகுப்பாடல்களில், காணலாம். கம்பனின் காவியநயத்தை பாஞ்சாலி சபதத்தில் சுவைக்கலாம். மூவர் தமிழின் பக்தி உணர்வை கண்ணன் பாட்டினிலும் பக்திப் பாடல்களிலும் பார்க்கலாம். இவ்வாறக தமிழ் இலக்கிய உலகின் அத்தனை புலவர்களையும் பாரதி என்னும் ஓர் உருவத்தில் காண்கின்றோம். அத்துணைக்கும் மேலாக விடுதலை உணர்வு என்னும் தூய்மையான நெருப்பிலே பாரதி எரிந்து உலகுக்கு கவிதை ஒளி காட்டுவதைக் காணலாம்.

## ஒளி அணைந்தது

1904-ம் ஆண்டில் 22-ம் வயதில் 'தனிமை இரக்கம்' என்னும் தலைப்பில் விவேக பாநு என்னும் நூலில் கவிதை எழுதியதன்மூலம் இலக்கிய உலகில் பிரவேசித்து இலக்கியவானின் புரட்சிச் சூரியனகத் திகழ்ந்த பாரதி 1921-ம் ஆண்டு செப்டம்பர் 11 ம் நாள் யானையால் தாக்கப்பட்டு 39-ம் வயதில் இறைவனடி சேர்ந்தார்.

17 வருடங்கள் கவிதை மழை பொழிந்த பாரதியின் இறுதிக் கவிதையாக ''இந்தியாவின் அழைப்பு'' என்னும் கவிதை அமைந்துள்ளது. இறக்கும் தறுவாயில் தாய்நாட்டையும் தமிழையும் தெய்வமெனப் போற்றிய பாரதி ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் சங்கமமாகின்றன்.''

## ஆவியுலகத் தொடர்பு—6

# பேய்கள்

வி. ரவிச்சந்திரன்

ஆவிகள் என்பன வேறு. பேய்கள் என்பனவேறு இவை இரண்டுக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டியது அவசியம். ஒவ்வொருவரும் பிறக்கும்போதே இவ்வளவு ஆண்டு காலம் உலகில் வாழவேண்டுமென்ற தீர்ப்புடன்தான் பிறக்கிறர்கள். ஆனல் விபத்து-கொலை - தற்கொலை முதலிய பல காரணங்களால் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பே பலர் மரணம் அடைகிறர்கள். அப்படி மரித்தவர்கள் ஆவி உலகம் செல்லாமல் செல்ல முடியாமல் இறந்தஇடத்திற்கு அருகிலேயே சுற்றிக்கொண்டிருப்பார்கள். அதாவது எவ்வளவு ஆண்டு இவ்வுலகில் வாழவேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டதோ அவ்வளவு ஆண்டு வரையிலும் இருப்பார்கள். (ஆனல் நாம் முறைப்படி வருடாவருடம் இவர்களுக்கு ஈமச்சடங்குகள் செய்து வந்தால் இவர்கள் சீக்கிரம் ஆவி உலகம் செல்ல அவை உதவுகின்றனவாம்.) உயிர்களுக்கு ஆண்டவன் அளிக்கும சிறைத்தண்டனையே பேய் வாழ்க்கை என்று கூடச் சொல்லலாம், அதாவது ஆவிகள் எங்கும் சுதந்திரமாகச் சென்று வருகின்றன. ஆனல் பேய்கள் மரணம் அடைந்த இடத்தை விட்டு அகல முடியாது. அப்படி வேறுஇடம் போகவேண்டுமானல் ஏதேனும் ஒரு மனித உடல் தேவைப்படுகின்றது. அதாவது ஒரு மீடியம் வேண்டும். பேய்கள் உபயோகிக்கும் மீடியம் வேறு. ஆவிகள் உபயோகிக்கும் மீடியம் வேறு! ஆவி உலக மீடியங்கள் பேய்களுடன் பேச முடியாது. பேச முயற்சிக்கவும் கூடாது. ஒவ்வொரு பேயும் தான் மரணம் அடைந்த இடத்தை விட்டு வேறு இடம் செல்லத் தொடர்ந்து முயற்சிக்கும். அந்த இடத்தைக் கடந்துசெல்லும் ஒவ்வொரு மனிதனுக்கும் மீடியம் தன்மை உள்ளதா? என்று அறிய முயற்சிக்கும். பெரும்பாலும் இளவயதுப் பெண்கள் தான் பேய்களுக்கேற்ற மீடியமாக இருக்கிறர்கள். தமக்குத் தகுந்த மீடியம் கிடைத்ததும் பேய்கள் மீடியத்தின் உடலில் உள்ள ஆவி உடலைச்செயலற்ற தாக்கி மீடியத்தை முழுமையாக ஆட்கொள்ளும். அதன் பிறகுதான் பேய்கள் தாங்கள் நினைத்த இடம் செல்லமுடியும்.

பேய்களுக்கு ஆவி உலகம் பற்றி ஒன்றும் தெரியாது. ஸ்தூல உடலில் இருந்து அதை பிரித்து இங்கேயே விட்டுவிடுகின்றனர். எனவே அது இங்கிருந்தபடியே மற்ற மனிதர்களைப் பார்க்கின்றது. அவர்களின் வாழ்க்கையை- வசதிகளை - மகிழ்ச்சியைப் பார்த்து ஏங்குகிறது. தான் இறந்ததை எண்ணிஎண்ணி ஓலமிடுகிறது. வருந்துகிறது. இப்படிப்பட்ட ஓசைகளை அதாவது ஓலங்களையோ மரங்கள் உலுக்கப்படுதல் போன்ற விசித்திர ஒலிகளையோ இரவு நேரங்களில் பலர் கேட்பது உண்டு. சில நேரங்களில் அந்த இடங்களில்

(7-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான நவநாகரிக தங்க,வைர நகைகள் வேண்டுமா?

பொ. அம்பலவாணர்

தங்க, வைர, நகை வியாபாரம்

119, கஸ்தூரியார் ரோட்,
போன்: 7199.

யாழ்ப்பாணம்.
தந்தி: வைரம்

# புதியதோர் இலக்கிய மரபை ஏற்படுத்திய மகாகவி பாரதி!

சத்தற்று வாடிக்கிடந்த சமுதாயத்திற்கு புத்துணர்வு ஊட்டினன். அவலக்குரலை எழுச்சிக்குரலாக மாற்றினன்.

**"புவியனைத்தும் போற்றிட வான் புகழ் படைத்துத்-தமிழ் மொழியைப் புகழிலேற்றுங்-கவியரசர் தமிழ் நாட்டுக்கில்லையெனும் வசை கழிக்க வந்த" சுப்பிரமணிய பாரதியின் நினைவுதினம்இன்று கொண்டாடப்படுகிறது. பாரதியின் கவிதைகள் இன்தமிழ் இலக்கிய உலகில் புரட்சிக் கருத்துக்களின் நிறைவுப் பெட்டகமாய்த் திகழ்கின்றன. கிள்ளைத் தமிழினிலே காலத்தால் வாடாத முல்லைக் கவிதை தந்த அம்மகா கவியின் நினைவாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

**பற்றிமாகரன்**

நனிர்மணி நீரும் - நயம்படு கனிகளும்-குளிர் பூந்தென்றலும் - கொழும்பொழிற் பசுமையும் வாய்ந்த பாரத மண் மாற்றாரிடம் அடிமையுற்றிருந்த காலம். பிச்சையிலும் மாற்றாரின் பின்னால் அடிசுமந்து -கச்சையிலார் போலக் கடுகளவும் மானமின்றி நாட்டை அடகுவைத்தும்- மக்கள் வாழ்ந்த நேரம். "நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த நிலை கெட்ட மனிதரை நினைத்துவிட்டால்-கஞ்சி குடிப்பதற்கிலார்-அதன் காரணங்கள் இவையென்னும் அறிவுமிலார்-புண்ணிய நாட்டினிலே இவர் பொறியற்ற விலங்குகள்போல் வாழ்கின்றாரே" என ஓர் இளம்நெஞ்சம்வேதனையில் துடிதுடித்தது. அந்த இளம்நெஞ்சத்திலே இறைவன் இயல்பாகவே கவித்துவம் என்னும் தெய்வீக எண்ணெயை ஊற்றி வைத்திருந்தான். சமுதாய விடுதலை உணர்வென்னும் தீ அந்த தெய்வீக எண்ணெயில் பட்டதும் அவ் இளம் நெஞ்சத்தில் இருந்து அனல்கக்கும் கவிதைகள் 'சமுதாய சாபக்கேடுகளை சுட்டெரிக்கும் எரிதழல்களாகப் பறந்துவந்தன. அவனுடைய இதயத்திலே ஊற்றெடுத்த நல்லாக்க எண்ணங்கள் கவிதை நதிகளாக மாறி பழகு தமிழ் நடையினிலே அவனிதயக் கருத்துக்களை அள்ளி வந்தன. அவைதான் பாரதியின் கவிதைகள் என பைந்தமிழ் உலகு போற்றுகின்ற விலையில்லாப் பெருஞ்சொத்து.

## அடித்தளத்தின் குரல்

தமிழ் இலக்கிய உலகிலே எண்ணற்ற காலத்தால் அழிக்கப்படமுடியாத பெரும் புலவர்களை காண்கின்றோம். ஆயினும் அவர்களுக்கும் பாரதிக்கும் இடையில் பெரும் வேறுபாடு ஒன்று உள்ளது. பாரதியின் காலம்வரை இலக்கிய உலகிலே அறத்தின் குரலை-ஆண்டவனின் அழைப்பை-வீரத்தின் முழக்கத்தை- வெற்றியின் சிரிப்பை-காதலர்களின் கிசுகிசுப்பை - இயற்கையின் இன்குரலை நாம் கேட்கின்றோம். ஆனல் பாரதிக்குப் பின்பே அடித்தள மக்களின் அவலக்குரலை இலக்கிய உலகு எதிரொலிக்கின்றது.

## கவிதைக்கொருபுதுக்கருத்து

இந்த அடித்தள மக்களின் குரலை இலக்கிய மன்றத்தில் ஒலித்திடச்செய்வதற்கு தடையாக இருந்த இலக்கண யாப்பு முறைகளைக் கூட பாரதி துணிந்து தகர்த்தெறிந்து புதியதோர் இலக்கண மரபை ஏற்படுத்தினன். அத்துடன் கவிதை என்றால் கனவுலகக் கற்பனையல்ல நனவுலக எழுச்சிக் கீதமெனக் காட்டினன்.

"......... .........நன்மனைத்
தலைவி, ஆங்கத் தனிப்
பதர்ச் செய்திகள்
அனைத்தையும் பயனிறை
யனுபவமாக்கி,
உயிரிலாச் செய்திகட்குயிர்
மிகக்கொடுத்து
ஒளியிலாச் செய்திகட்
கொளியருள் புரிந்து
வானசாத்திரம் மகமது
வீழ்ச்சி
சின்னப் பையல் சேவகத்
திறமை
எனவரு நிகழ்ச்சி யாவே
யாயினும்
அனைத்தையு மாங்கேயழ
குறச் செய்து
இலௌகிக வாழ்க்கையிற்
பொருளினையிணைக்கும்
பேதை மாசக்தியின்
பெண்ணே வாழ்க..."

எனக் கவிதைத் தலைவிக்கு வாழ்த்துரைக்கும் பாரதி கவிதை என்றால் என்னவென எடுத்தியம்புகிறன். நாட்டு நடப்புகளும்-வாழ்க்கை காட்சிகளும் கவிப் பொருளாக மாறினல் மட்டுமே கவிதை உலகு கற்பனையுலகாக மாறாது மக்களின் உணர்ச்சி உலகாக உருமாறும் என அடித்துக் கூறுகிறன். அத்துடன் நின்றுவிடாது இலக்கியம்மூலம் கலாச்சார அரசியல் புரட்சி நடத்தவும் முற்பட்டு பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திடப் புறப்படுகின்றன். அடித்தள மக்களின் குரலை இலக்கிய உலகுக் கேட்க வைத்த பாரதி அவ் இலக்கியம் என்னும் சத்துணவால்-ஒளியிழந்த நாட்டிலே நின்றேறும் உதய ஞாயிறெப்பவே கலையிழந்த நாட்டிலே கலை பிறக்கவைத்திட கவிதை மழை பொழிந்தான். மக்கள் வாழ்வு மலர்ந்திட விடுதலை வாழ்வு வேண்டுமென்று விடுதலை முழக்கமிட்டான். அவன் கவித்துவம் என்னும் ஊதாங் குழல் கொண்டு நீறுபூத்த நெருப்பாக கிடந்த விடுதலைத் தீயை சுவாலைவிட்டெரிய வைத்தான். கவித்துவம்+விடுதலை=பாரதி என்னும் அளவுக்கு பாட்டால் நாட்டை நடத்திட அவன் முயன்றன்.

## மூன்று விடுதலைகள்

பாரதி வெறும் ஆட்சிக் கைமாற்றத்தைவிரும்பவில்லை வெள்ளையனை வெளியேற்றுவதுடன் தன் கடமை முடிந்ததாகக் கருதவில்லை. அரசியல் விடுதலை- சகோதரத்துவ விடுதலை - பொருளாதார விடுதலை என்னும் மூன்று திரிகொண்டு பூரண சமுதாய விடுதலை என்னும் குத்து விளக்கை ஏற்ற முனைந்தான்.

"என்று தணியுமிந்த சுதந்
திர தாகம்?
என்றுமடியுமெங்கள்
அடிமையின் மோகம்?
என்றெமதன்னை கைவிலங்கு
கள் போகும்?
என்றெமதின்னல்கள் தீர்ந்து
பொய்யாகும்?"

என அரசியல் விடுதலைக்காய் மக்களை வீறுகொண்டெழ வைத்த பாரதி

ஏழையென்றும் அடிமை
யென்றும்
எவனுமில்லை ஜாதியில்
இழிவுகொண்ட மனித
ரென்ப
திந்தியாவில் இல்லையே;

எனச் சகோதரத்துவ விடுதலைக்காய் குரல்எழுப்புகிறன். அத்தோடு நின்றுவிடாது

"குடைகள் செய்வோம்
உழுபடைகள் செய்வோம்
கோணிகள்செய்வோம்
இரும்பாணிகள்
செய்வோம்
நடையும் பறப்புமுணர்
வண்டிகள் செய்வோம்
ஞாலம் நடுங்கவரும்
கப்பல்கள் செய்வோம்"

எனப் பொருளாதார விடுதலைக் கனவு காண்பதைக் காணலாம். எனவே பாரதி பைந்தமிழ் உலகில் புதியதோர் சமுதாயத்தை-சமத்துவமான-நிலையான பொருள்வளமுடைய சமுதாயத்தை கட்டி எழுப்பிடவே கனவுகண்டான்.

## சமுதாயப் பிரச்னைகள்

பாரதி முழுமையான விடுதலையை வேண்டிநின்றபோதில் தமிழ்ச் சமுதாயத்தின சாபக்கேட்டுப் பிரச்னைகளை பூரணமாக உணர்ந்திருந்தான். பெண் அடிமை எதிர்ப்பு-சாதி ஒழிப்பு - நிறபேதஎதிர்ப்பு-மதப் பிரிவினை எதிர்ப்பு என எத்தனையோ சமுதாயப் பிரச்னைகளைப் படம்பிடித்து பாடல் பொருளாக்கிக் காட்டுவதுடன் ஓய்ந்துவிடாது சமுதாயத்தின் செல்லரிப்பு நோய்களை நீக்கிட புதியதோர் விதியினை வகுப்பதைக் காணலாம்.

"இனியொரு விதிசெய்
வோம்-அதை
எந்தநாளும் காப்போம்
தனியொருவனுக்குணவில்லை
யெனில்
ஜகத்தினை யழித்திடு
வோம்"

என புரட்சி விதிவகுத்து சமுதாயச் சதிகளுக்கு சாவுவழி காட்டுகின்றன். ஆம்! பசிப்பிணியே சமுதாயப் பிணிகளின் அடிப்படைக் காரணி என நாடி பார்த்துக் கூறும் பாரதி

"முப்பது கோடி ஜனங்
களின் ஸங்க
முழுமைக்கும் பொது
உடைமை
ஒப்பில்லாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை"

எனப் பொதுவுடைமை பேசுகின்றன். இறைபக்தியின்இருப்பிடமாகத் திகழும் பாரதியின் உள்ளத்தில் பொதுவுடைமைத் தத்துவமா? எனச் சிலர் கேட்கலாம். மதங்களை மகிமைக்காக கடைப்பிடியாது அவை காட்டும் அன்புணர்வுடன் உண்மை வழியில் கடைப்பிடிப்பின் அங்கே இறைவனுடன்கூடிய பொதுவுடைமை தானகவே மலரும்-மலரவேண்டுமென்பதைத்தான் பாரதியின் பாடல் எடுத்துக்காட்டுகிறது.

"எல்லா உயிர்களிலும்
நானே இருக்கிறேன்
என்றுரைத்தான் கண்ண
பெருமான்
எல்லாரு மமரநிலை யெய்து
நன்முறையை
இந்தியா உலகிற்களிக்கும்"

எனக் கூறுவதன்மூலம் இறையன்புடன் கூடிய பொதுவுடைமையே சமுதாயப் பிரச்னைகளுக்கு அடிப்படைத் தீர்வாக அமையும் என ஆணித்தரமாக எடுத்துக் காட்டுகின்றன்.

## பாரதியின் பக்தி

சமுதாய - அரசியல் விடுதலைக்காக கவிதைக் களம் அமைத்தபாரதி,பக்தி உணர்வு சிறந்து விளங்கினலே சீரிய ஒழுக்கமுள்ள சமுதாய அமைப்பு ஏற்படுமென நம்பினர்.இதனல் பக்திப் பாடல்களின்மூலம் சமுதாயப் புரட்சியையும் பக்திஉணர்வையும்ஏககாலத்தில் வெளியிடுகின்றர். பாரதியின் பக்திப் பாடல்களை விமர்சிப்பதானல் அது ஒரு தொடர் கட்டுரையாக மாறிவிடும். ஆயினும் பாரதியின் பக்திப் படைப்புக்களில் முதன்மை வகிக்கும் கண்ணன் பாட்டில் ஒரு சிறு உதாரணத்தைப் பார்க்கலாம்.

"...நண்பனய், மந்திரியாய்,
நல்லாசிரியனுமாய்
பண்பிலே தெய்வமாய்ப்
பார்வையிலே சேவகனய்
எங்கிருந்தோ வந்தான்..."

என்னும் பாரதியின பாடல் வரிகளிலே இறைவனை எட்டாத பொருளாக வைக்காது சமுதாயத்தின சாதாரண ஈதா பாத்திரங்களாகக் காட்டுகின்றர். அத்துடன் நின்றுவிடாது "கண்ணனைநான் ஆட்கொண்டேன்! கண்கொண்டேன்; கண்ணனையாட்கொள்ளக் காரணமுள்ளவனே" என அக்கவிதையைமுடிக்கின்றர். இங்குதான்பாரதியின் விடுதலையுணர்வைக் காண்கின்றேம் கண்ணன்மகாபாரதத்தில் வழிகாட்டியாக நின்று நீதி நிலைத்திட வைக்கின்றன். அதேபோன்று நலிவுற்றிருந்த பாரதத்திற்கு வழிகாட்டிட விடுதலைகொடுத்

(4-ம் பக்கம் பார்க்க)

# இந்திய இலக்கியத்தில் மறுமலர்ச்சி

இந்திய இலக்கிய மறுமலர்ச்சிக் கருத்தில் நம்பிக்கை உள்ள சில இந்தியர்கள், அந்த மறுமலர்ச்சி 14-18-ம் நூற்றாண்டுகளில் ஏற்பட்டதாகக் கருதுகின்றனர். வேறு சிலர் 19-ம் நூற்றாண்டில் ஏற்பட்டதாகக் கூறுகின்றனர். 19-ம் நூற்றாண்டில் இந்தியாவில் ஏற்பட்டுக்கொண்டிருந்த நிகழ்ச்சியானது, 18-ம் நூற்றாண்டில் மேற்கே ஏற்பட்ட அறிவுஒளி பரவிய காலத்தை ஒத்திருப்பதாக நான் கருதுகிறேன். பல இந்திய அறிஞர்களும் இதே கருத்தைக் கொண்டு இருக்கின்றனர்.

இந்தியக் கலாசாரத்தில் 19.ம் நூற்றாண்டின் முக்கியத்துவத்திறகு மற்றொரு காரணம், இந்தியக் கலையில் யதார்த்தப்போக்கு தோன்றிய காலம் அதுதான்.

20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில், சித்தாந்தம் மற்றும் அழகியல் சம்பந்தப்பட்ட சிக்கலான பிரச்னைகள் பலவற்றை சோவியத் இந்தியவியலாளர்கள் கண்டனர். அவை நிபுணர்களால் இன்னமும் விளக்கப்படவேண்டிய நிலையில் உள்ளன. மேலைநாடுகளில் பேரிலக்கிய வாதம், அதீதக் கற்பனைவாதம் முதலிய போக்குகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோன்றிமறைந்தன. ஆனல் 19-ம் நூற்றாண்டின் முடிவிலும், 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் இந்திய இலக்கியம் ஒரேசமயத்தில் பல்வேறு செல்வாக்குகளுக்கும், குறிப்பாக ஆங்கில இலக்கியத்தின் செல்வாக்குக்கும் பல்வேறு காலகட்டங்களின் சமுதாயக் கருத்துக்களின் செல்வாக்குகளுக்கும் உள்ளாயிற்று. தவிர, இந்தச் செல்வாக்குகள், ஐரோப்பாவில் நிகழ்ந்ததுபோல் தனித்தனிச் சிந்தனை மற்றும் இலக்கியப் போக்குகளாகவோ, அவற்றிற்கிடையே மோதல்களாகவோ உருவெடுக்கவில்லை.

**வி. லாம்ஷுகோவ்**

ஆனல் இந்திய மறுமலர்ச்சி இயக்கம் ஐரோப்பிய இயக்கத்தை அப்படியே காப்பி அடித்தது போல இல்லை என்பதைச் சொல்லத் தேவையில்லை. மேற்கத்திய இயக்கத்தின் செல்வாக்கு அதில் இருந்திருக்கலாம்.

இந்திய இலக்கிய வரலாற்றில் 19-ம் நூற்றாண்டானது, மிகவும் சுவையான, ஆனல் சிக்கல் நிறைந்த காலகட்டங்களில் ஒன்றாகும். அடிப்படையான மாறுதல்களும் மாபெரும் சாதனைகளும், பல்வேறு கலாசார பாரம்பரியங்கள், கலைமரபுகள், தத்துவ, அரசியல், சமூக, சமயப் போக்குகள் ஆகியவற்றிற்கிடையே மோதல்களும் ஏற்பட்ட காலம் அது.

இந்திய மறுமலர்ச்சியின் மூலகர்த்தாக்கள் மேலைநாட்டு இலக்கியப் போக்குகளைக் கண்மூடித்தனமாகக் காப்பியடிக்கவில்லை என்பதை இது காட்டுகிறது. இந்திய சமுதாயத்தின் ஆன்மீகத் தேவைகளைக் கருத்தில் கொண்டு, மேலைநாட்டு இலக்கியப் போக்குகளிலிருந்து தேவையான சில அம்சங்களை மட்டும் எடுத்துக் கொண்டனர். 19-ம் நூற்றாண்டின் இந்திய இலக்கியம் பற்றிய இந்த அணுகுமுறை, மேலைநாட்டு நிபுணர்களின் முறையிலிருந்து பெரிதும் மாறுபட்டதாகும். இந்தக் காலகட்டத்தில் இந்தியக் கலாசாரம், ஐரோப்பியக் கலாசாரத்தின மோசமான பிரதியே என்று மேலைநாட்டினர் கருதுகின்றனர். இந்தக் கருத்தைத் தவறு என்று நிரூபித்து அதன் போலித் தன்மையை அம்பலப்படுத்துவதுடன், 19-ம் நூற்றாண்டில் இந்திய இலக்கியப் போக்கை பாரபட்சமற்ற முறையில் ஆராய்வதைத் தங்கள் குறிக்கோளாகக் கொண்டிருக்கின்றனர், சோவியத் இந்திய இயலாளர்கள்.

இந்திய இலக்கியத்தின் மீது ஐரோப்பிய இலக்கியத்தின் செல்வாக்கு அதிகமாக இருந்த போதிலும், இந்தியப் படைப்புக்களில் இந்திய மண்ணின் "சாரமே" மேலோங்கி நின்று இந்தியாவின் யதார்த்த நிலைமையையும், இந்திய மக்களின் ஆசாபாசங்களையும் பிரதிபலிக்கின்றது.

# மருத மர நிழலில்...!

[யாழ். கோட்டை மைதானத்தின் கரையில் நிற்கும் மருதமரத்தின் அருகில் நின்று புதுக்கவிதைக்காரர் ஒருவர் யாழ். நகரைப் பாக்கிறர்.]

யாழ்ப்பாணத்தில் மருதமரம்
அதன் நிழல்
அருகருகே
அஞ்சு, பத்து, பன்னிரண்டு
தொகைக்கு மிஞ்சும்
மனித இன
மந்தைக் கூட்டம்
ஆண், பெண், சின்னன், பெரிசு
குமரிகள் மட்டும் இல்லை
அவர்கள் ''வேட்டை''யாடும் கூட்டம்.

0 0 0

நிமிர்ந்து நின்று புல்லுக் குளத்துள்
நுனியைப் புதைத்து நிற்கும்
நாலு முகம்; புருவம்; கண்மணி
வெண்விழி; கறுப்பில் இலக்கம்
நிமிர்ந்து பார்த்து நடையை
நீட்டி விடும் கூட்டம்.

0 0 0

கிழக்கு நின்று கிழரும்
மழலை கிழடு வத்தும் திசையில்
வெண்மைப் பஞ்சு; மேகம்
கறுப்பு, மஞ்சள், நீலம், செம்மை
கலந்த வர்ணக் கொத்தாய்
மலர்ந்த தோற்றம் பின்னே,
முன்னே;
அரசமரக் கறுப்பு
ஒளிகள் மட்டும் இடையில்
புகுந்து எம்மை அணுக
அச்சடித்தமை போல்
அழகு நிறைக் காட்சி.

0 0 0

நிமிர்ந்து நிற்கும் உள்ளே
மாறி மாறிப் பலரும்
மதங்கள் சமைத்த கூடம்,
டச்சுக்
கோட்டைச் சுவர்
கிளைத்துக் கிடக்கும் செடிகள்;
முருகைக் கற்கள்,
சதுரம்; நீள் சதுரம்
கறுப்பாய்ப் பாசிப் படிவு, நீளம்
அழகாய் ஐந்து மூலைக் கூடம்
அவர்கள் ஒழிய,
அடுத்து;
வந்தவர்கள் அங்கே
வந்தவர்கள் வெளியே;
பின்னர்,
வருபவர்கள் உள்ளே
பின்னல் வந்தோர் நாமாம்!

0 0 0

உள்ளே;
மறியல்
நாய் போல் மனிதர்
நாறும் உலகின் குப்பை
கூளம் போடும் இடமாம்.
காவல்காரர் உண்டு
அவரைக் கவனமாகக் காக்க
வேலை உண்டு
உடுத்துறங்கி
உயிரை வளர்க்க முடியும்.

0 0 0

முன்னே;
எம்மைத் தூக்கி நடுங்க வைத்த
தூக்குமேடைச் செங்கல்
இன்னும் உக்கிமுடியவில்லை
நீட்டிக் கழுத்தை நீட்டி
தம்மை எட்டிப் பார்க்கும் கோலம்.

0 0 0

தூரத்தில் பல இலைகள்,
காக்கைகள் தலையில்
நரைத்த மயிர்கள்;
எச்சம்,
அவை அவர்க்குத்
துச்ச மென்ற நினைப்பு.

0 0 0

சுற்றி வீதிப் புறத்தில்
நாலு;
நாலே நாலு
இன்னும், நகரின் சந்தி
பல பேர்
பார்வைபடுமிடங்கள்
இயற்கை பொய்யாதிருக்க
'வரப்புயர' சிறப்புரைக்கும்
நாட்டிய மரங்கள்,
சீமெந்துக் கற்கள்;
கற்களிற் சாளரப் பொந்து.

0 0 0

மீண்டும்
மருதமரம்,
அருகே நிழல்,
புல்லுக்குளம்,
முனியப்பர் கோயில்,
சினிமாத் தியேட்டர்,
மல நாற்றம்
அவர்கள் எங்கே போவார்
மனதை அசுத்தப்படுத்தும்
மங்களக்காட்சிக்காரர்
''நகரை அசுத்தப்படுத்தும்
நாய்கள், பேய்கள்'',
பத்திரிகைக் கொட்டை
எழுத்துப் பத்தி நாலு.

—ஜோதியாக—

## வானொலி நாடகம் எழுதுவது எப்படி-6

# உதாரணத்திற்கு இரு நாடகங்கள்

என்ன எழுத ஆரம்பித்துவிட்டீர்களா? சற்றே பொறுங்கள் உங்கள் நலன் கருதி இரண்டு மாதிரி வானொலி நாடகப் பிரதிகளையும் தந்துள்ளேன். ஒன்று 30 நிமிடம் ஒலிபரப்பாகியது. மற்றையது 15 நிமிடங்களுக்கு ஒலிபரப்பானது. ஆமாம் இரண்டுமே வானொலியில் ஒலிபரப்பாகிய நாடகங்களே இவற்றையும் வாசித்துப் பாருங்கள். அதன் பின்னர் எழுத ஆரம்பிக்கலாம்.

### ''தண்டனை''

நாடகம்: 30 நிமிடம்
பாத்திரங்கள்:
வைத்திலிங்கம்
முத்தையா
இவரது மனைவி செல்லம்மா
தங்கம்மா
முருகுப்பிள்ளை
சிவகுரு
பொலிஸ் இன்ஸ்பெக்டர்

(குறியிசை)

முருக: கடவுளுக்குக் கண்ணில்லையப்பா. நல்ல மனுஷரை வாழவிடாது. வைத்திலிங்கம் ஒரு கொடைவள்ளல். இல்லாத ஏழைகளுக்கு உதவ எண்டே அவரைப் படைச்சுப் போட்டு...... இடையாலை கொண்டுபோட்டுது.

முத்தை: (வரட்டுச் சிரிப்பு)

முரு: ஏன் சிரிக்கிறய் முத்தையா... அந்த மனுஷன் வைத்திலிங்கம் மிதிச்ச இடத்துப் புல்லுக்கூடச் சாகாது...

முத்தை: சாகாத புல்லு ஆர் மிதிச்சாலும் சாகாது... வைத்திலிங்கம் நல்ல மனுஷர் கடவுள்தான் கெட்டவர்... கண்ணில்லாதவர்... அது தானே உன்னுடைய விளக்கம் முருகுப்பிள்ளை.

முருகு: என்னுடைய விளக்கம் மட்டுமல்ல. இந்த ஊரிலை இருக்கிற குஞ்சுகுருமனை கேட்டால் கூடச் சொல்லும்...

முத்தை: அது தான்... வைத்திலிங்கத்துடைய கெட்டித்தனம். அந்த அளவு தூரத்திற்கு உலகத்தை ஏமாற்றியிருக்கிறர்.

முருகே: முத்தையா வைத்திலிங்கத்தைப் பற்றி வாய் கூசாமல் பேசினல்... உன்னுடைய நாக்கு அழுகிப் போகும்.

முத்தை: முருகுப்பிள்ளை... நாக்கு அழுகிப்போகட்டும்... அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை

முருகு: இந்த ஊர்ப்பிறந்த மனுஷனுமில்ல... இருபது வருஷத்துக்கு முந்தி இலங்கை வந்து குடியேறின மனுசன்... ஊர்ப்பிறந்தவனே செய்யாத எத்தனையோ காரியங்களை இந்த ஊருக்குச் செய்திருக்கிறர்.

முத்தை: மறுக்க இல்லை நான் முருகுப்பிள்ளை... எனக்கும் கஷ்டங்கள், துன்பங்கள் ஏற்படுகிறபொழுது நானும் உன்னைப்போலக் கடவுளுக்குக் கண்ணில்லை என்று சொன்ன ஆள்தான். ஒவ்வொரு மனுஷனும் அப்பிடித்தான். தனக்குத் தனக்குத் துன்பம் வாற நேரந்தான்... கடவுளையே நினைக்கிறது.

முருகே: அப்பிடியெண்டால் வைத்திலிங்கம் ஒரு கெட்டவர். அவர் செத்ததுதான் நல்லது எண்டு... நீ சொல்லுறய்...

முத்தை: நான் சொல்லுறதென்ன... கடவுள்தான் கண்ணுக்கு முன்னலை காட்டியிருக்கிறரே...

முருகே: என்னவோ... என்னுடைய கண்கண்ட தெய்வம் வைத்திலிங்கம் ஐயாதான். அவர் இறந்துபோனரே எண்டு இந்த ஊரே கண்ணீர் விட்டுக் கதறி அழுகுது. நீ மட்டும் குதர்க்க நியாயம் பேசிறய். நீ முந்தநாள் வந்தனீ... உனக்கு அவரைப் பற்றித் தெரியாது.

முத்தை: வைத்திலிங்கம் உயிரோடை இருந்தபோதும் பலபேர் கண்ணீர் விட்டுக் கதறியிருக்கினமே... ஆனல...

### ''வரணியூரான்''

வைத்திலிங்கம்... தன்னுடைய பணப்பலத்தாலை வெளிவேஷத்தாலை... ஊருக்கு உபகாரியாக வாழ்ந்து உன்னைப்போன்றவை கண்ணீர் விட அவர் மறைஞ்சிட்டார். இது கடவுளுடைய தண்டனை. உண்மையாக இது கடவுள் தண்டனை.

(குறியிசை)

அறிவிப்பா-''தண்டனை''... நாடகம்... 'வரணியூரான்' எழுதியது.

(குறியிசை)

வைத்தி: (வந்துகொண்டு) தங்கம்... தங்கம்... என்னைப் பார் தங்கம், நான் உன்னை ஒருநாளும் கைவிடமாட்டன்...

தங்க- உன்னை இனியும் நம்புறதா? அதுவும் இந்தத் தங்கத்தை நம்பச் சொல்லிறியரா... உன்னை நான் நம்பினதுக்கு நீ தந்த பரிசு போதாதா?

வைத்தி: தங்கம்... இந்த வைத்திலிங்கத்தைப் பற்றி உனக்கு இன்னும் சரியாகத் தெரியேல்லை.

தங்கம்- இல்லை... இல்லை... உன்னைப்பற்றி வடிவாகத் தெரிஞ்சபடியால்தான் பேசிறன்...

வைத்தி: பேசிக்கொண்டிருக்க நேரமில்லை... ஊருக்குள்ளை... நான் மதிப்பானவன். என்னைக் காப்பாற்று. தங்கம்... பொலிஸ் என்னைத் துரத்திக்கொண்டு வருகுது...

தங்க: அப்பிடியா... மெத்த நல்லது... மிஸ்டர் வைத்திலிங்கம்... உன்னை நான் பழிக்குப் பழி வாங்காமல்விடமாட்டன்... நானே உன்னைப் பொலிசிலை காட்டிக்குடுக்கப் போறன். இந்தமுறை நீ தப்பமுடியாது...

வைத்தி: தங்கம்... தங்கம்... உன்னுடைய காலிலை விழுந்து கும்பிடுறன். என்னைக் காட்டிக் குடுக்கவேண்டாம்.

தங்கம்: என்னை நம்பி வைச்சு மோசஞ்செய்தாய் அதன் பயனக எனக்குப் பிறந்த குழந்தையையே கொலை செய்தாய். இண்டைக்கு உன்னைத் தப்பவிட்டால், என்னைப்போலை இன்னும் எத்தனை பெண்களை மோசஞ்செய்வாய்.

வைத்தி: தங்கம்... உன்னுடைய குழந்தை சாகயில்லை. பத்திரமாக வளர்ந்துவருகிறது... என்னை நம்பு.

தங்கம்: உண்மையாகவா... எனனுடைய குழந்தை உயிரோடை இருக்கிதா... (பொலிஸ் விசில் சத்தத்தை தொடர்ந்து ஜீப் வண்டி போகும் சத்தம்).

வைத்தி: அப்பாடா...... பொலிஸ் ஜீப் போய்விட்டுது. நான் தப்பிவிட்டன். இனி என்னைப் பிடிக்கமுடியாது இந்தப் பழியை வேறு ஆருடைய தலையிலை கட்டிவிட்டால்... (சிரிப்பு) தங்கம்... நன்றி நான் வாறன்.

தங்கம்: தப்பிஓடப் பார்க்கிறியா? எனனுடைய குழந்தை எங்கை?

வைத்தி: குழந்தை... [சிரிப்பு] இன்னும் உயிரோடைதானிருக்குது... எண்டு நம்பியிருக்கிறியா? பைத்தியக்காரி... உன்னுடைய குழந்தை பரலோகத்திலை இருக்குது... போய்த் தேடிப் பார்.

தங்கம்: தெரியும் எனக்கு... என்னுடைய குழந்தையைத் தேடி நானும் போகத்தான் போறன் வைத்திலிங்கம்... அதுக்கு முதல் உன்னையும் அனுப்பிவிடுறன். இனியும் நீ உயிர்வாழக்கூடாது... ... இதோ இந்தக் கத்தியைப் பார்... போ.

வைத்தி: தங்கம் என்னைக் கொல்லவேண்டாம்... இப்பவே நான் உன்னைக் கலியாணங் கொண்டு போறன். உன்னை நானே ஏற்றுக்கொள்ளுறன். என்னோடை வா... இந்த ஊரைவிட்டே... ஓடிப் போவம்.

தங்கம்: [சிரிப்பு] ஆகா... ஆகா... என்ன அன்பு... என்ன ஆதரவு... வைத்திலிங்கம். உன்னைநான் கொல்லாமல் விடமாட்டன். ஆ... கொலை... கொலை... வைத்திலிங்கம் என்னைக் கொலை செய்து போட்டியே... ஆ... அம்மா... ஆ... ம்...

வைத்தி: அட்டகாசம் செய்தியே... அடங்கிவிட்டியா... தங்கம். என்னைக் கொல்லப் பார்த்தாய்... இப்ப நீயே போய்விட்டாய்... நான் வாறன்.

முத்தை- [வந்துகொண்டு] ஓடவேண்டாம் நில்லு... எங்கை ஓடப் பார்க்கிறய்... வைத்திலிங்கம்... ஊருக்கு நீ நல்லவனுக நடிக்கலாம்... ஆனல் நீ ஒரு மிருகம்... உன்னைப்பற்றி எனக்கு வடிவாகத் தெரியும். தங்கத்தைக் கெடுத்தாய் அதன் பலனக அவளுக்குக் கிடைத்த குழந்தையை... நீ தப்புறதிற்காகக் கொலைசெய்தாய்; இப்ப தங்கத்தையே... கொலைசெய்து போட்டு தப்பிஓடப்பார்க்கிறய்...

வைத்தி: முத்தையா நீயா... தங்கத்தை நான் கொல்லாவிட்டால் தங்கம் என்னைக் கொலைசெய்திருப்பாள்... ஏதோ... ஒரு வெறியிலை இந்தக் கொலையைச் செய்துபோட்டன். தயவுசெய்து என்னைக் காட்டிக்குடுக்க வேண்டாம். இந்தா இதிலை பத்தாயிரம் ரூபா இருக்குது... நீயே எடுத்து வைச்சுக்கொள்.

முத்தை: வைத்திலிங்கம் இப்ப நான என்ன செய்ய வேணும்.

வைத்தி: நான் சொல்றபடி செய் முத்தையா... நீ இங்கையே இரு... நான் போய்... ஒருதருக்கும் தெரியாமல் பிணத்தைப் புதைக்கிறதுக்கு ஒழுங்குபண்ணிப் போட்டு வாறன்...

முத்தை: சரி... சரி... போய்க் கெதியிலை வா... எனக்குப் பயமாயிருக்கு... சும்மா இருந்த எனக்கு பத்தாயிரம் ரூபா கிடைச்சிருக்குதே... ம்... எங்கையோ கொள்ளையடிச்ச காசாயிருக்கும்...

தங்கம்: அம்மா... ம்... மா... தண்ணீர்... தண்ணி...

முத்தை: தங்கம் நீ சாகயில்லையா... இந்தா தண்ணி...

தங்கம்: வைத்திலிங்கம் ஓடிவிட்டானு...

முத்தை: இல்லை தங்கம்... வைத்திலிங்கம் இப்ப இங்கை வருவான்...

தங்கம்- பைத்தியமா... வர மாட்டான்... உன்னை மாட்டி வைக்கப்போருன்... நீ இந்த இடத்தைவிட்டு ஓடித்தப்பு... (பொலிஸ் ஜீப் வரும் சத்தம்)

## தமிழ் வளர்த்த கிறிஸ்தவர் (23)

# பதினறு மொழிகளை அறிந்திருந்தார் ஞானப்பிரகாசர்

வண. எம். ஏ. இரத்தினராஜா

ஈழம் தந்த மாபெரும் கிறிஸ்தவ தமிழறிஞர் யாழ்ப்பாணத்து சுவாமி ஞானப்பிரகாசர் ஆவார். இவர் மானிப்பாய் என்னும் ஊரில் 1875-ம் ஆண்டு பிறந்தவர். இவர் தகப்பனர், ஒரு சைவப் பெரியார். இளமையிலேயே கிறிஸ்து மதத்தைத் தழுவிய ஞானப்பிரகாசர் தமது கல்லூரிப் படிப்பு முடிந்ததும், ஒரு தோட்டத்தில் கணக்காளராகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்தார். பின்னர் இலங்கைப் புகையிரதப் பகுதியின் தலைமை அலுவலகத்தில் ஓர் உயர்ந்த உத்தியோகத்தைப் பெற்ருர். எனினும் அவர் மனம் சமய வாழ்க்கையையும் தொண்டையுமே அதிகம் நாடியது போதிய சிந்தனையின் பின், உலக வாழ்க்கையைத் துறந்த ஒரு கிறிஸ்தவ குருவாக இவர் மாறினர். தமது குருத்துவக் கல்வியை முடித்துக்கொண்டு 1901-ம் ஆண்டில் ஒரு பூரண மதகுருவாக இவர் அபிஷேகம் பெற்ருர்.

ஏறக்குறைய பதினறு மொழிகளை நன்கு கற்றவராயும் அவைகளில் அதிக பாண்டித்தியம் பெற்றவராயும் சுவாமி ஞானப்பிரகாசர் விளங்கினர். எழுத்திலும் பேச்சிலும் வல்லவராய் இவர் விளங்கினர். கிறிஸ்தவ சத்தியங்களை சகலரும் அறியத்தக்க வகையில் உபதேசிக்க இவர் கையாண்ட வழி தர்க்கப் பிரசங்கங்களாகும். அவற்றுள் 'குருவில்லா வித்தை' 'பாவத்தைத் தீராத் தீர்த்தம்' 'இரட்சணிய பலி' 'மெய்பாதி பொய் பாதி' 'கணக்குண்டு வழக்குண்டு' 'உலகத்தின் ஞான சூரியன்' என்பன மிக முக்கியமானவை. இவற்றைவிட திருமறை உண்மைகள், திருச்சபைச் சரித்திரம் இறைவழிபாடு என்பன பற்றிய அரிய நூல்கள் பலவற்றையும் இவர் ஆக்கினர்.

இவர் ஒரு சைவசித்தாந்தக் கடல், சைவசித்தாந்தத்தின் போதனைகளை மிக நுட்பமாய் ஆராய்ந்த சுவாமி அவர்கள், ஆங்கிலத்திலும் தமிழிலும் அதனையிட்டு அநேக நூல்களும் அறிக்கைகளும் வெளியிட்டார்கள்.

தமிழ் மொழி இனிது எனக் கூறக்கூடியவன், பிறமொழிகளையும் நன்கு அறிந்தவனே. அதனுலேயே நாமறிந்த

[7-ம் பக்கம் பார்க்க]

ராஜா (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 5-30
போன்: 7180
எஸ் எஸ் ஆர் - சரோஜாதேவி நடித்த
தேடிவந்த செல்வம் [புதிய பிரதி]

மனோஹரா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30 2-30 6-00
எம். ஜி. ஆர். - லதா-நாகேஷ்
அறிமுகம் பவானி
நடித்த
உழைக்கும் கரங்கள்
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் [யாழ் நகர்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
விஜயகுமார் - ஜெய்சித்ரா
தாய் இல்லாக் குழந்தை

ரிடோ (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00
போன்: 7698
ஜெய்சங்கர் - சுஜாதா
நீ ஒரு மகாராணி

வின்ஸர் [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30, 5-30
சிவாஜி, மஞ்சுளா, தேவிகா, கமலஹாசன், ஜெயசித்ரா நடித்த
சத்யம்
(ஈஸ்ட்மன் கலர்)

RIO (Jaffna)
Grand Release With New Projector's
Daily 10-30, 4-45, 7-15 p. m. only
EDGAR RICE BURROUH'S
At The Earth's Core
FAMILY ENTERTAINMENT

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-30 மாலை 6-00
சிவாஜி - கே. ஆர். விஜயா நடித்த
ராமன் எத்தனை ராமனடி
(புதிய பிரதி)
எமது அடுத்த வெளியீடு.
பெண் தெய்வம்

## பேய்கள்....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

உருவங்களையும் பார்ப்பதுண்டு இத்தகைய அனுபவங்களைப் பெற்றவர்களே பேய்களின் மீடியமாக இருக்கும் சக்திபெற்றவர்கள். இப்படிப்பட்ட மீடியத்தை ஆக்கிரமித்துக் கொண்ட பேய்கள் அவர் மூலமாகத் தாங்கள் செய்ய நினைத்ததை எல்லாம் செய்யும். அந்தச்சமயத்தில் மீடியத்தின் உடலில் யானை பலம் இருப்பதை நேரில் பார்த்தவர்களால்தான் புரிந்துகொள்ளமுடியும். இயற்கையில் சாதுவான ஒருவரைப் பேய் ஆட்கொண்டால் அவர் செயல்கள் முற்றிலும் தலைகீழாக மாறிவிடும். இது ஏன் என்று பேய் வாழ்க்கை முடிந்து ஆவி உலகம் சென்ற ஒருவரைக் கேட்டேன். அந்தச்சமயம் எனக்கு ஒன்றுமே புரியவில்லை. ஒரே வெறித்தனமாக இருந்தது. கண்ணில் பட்ட மனிதர்களையும் பொருள்களையும் அழிக்கவேண்டும் என்ற எண்ணம்தான் இருந்தது" என்று அவர் கூறினார்.

இப்படி மீடியத்தை ஆட்கொண்ட பேயை அந்த உடலில் இருந்து விரட்டுபவர்கள் உள்ளனர். அப்படி அது விரட்டப்பட்டால் மீண்டும் இறந்த இடத்திற்கே வந்துவிடும். வந்தே ஆகவேண்டும்.

அப்படி வருவதற்கு அந்த மீடியத்தின் சக்தியையே அது உபயோகிக்கும். அதன்பிறகு பழையபடி வேறு மீடியத்தை எதிர்பார்க்கத் தொடங்கும். இந்த நிகழ்ச்சியை மனதில் கொண்டே பேயாய் அலைதல் என்ற வார்த்தைகள் பிறந்திருக்கவேண்டும்.

இப்படிக் குறிப்பிட்ட காலம் வரையில் வாழ்ந்ததும் உரிய நேரத்தில் அது ஆவியுலகம் அழைத்துச் செல்லப்படுகிறது. அங்கும் பாவ லோகத்தையே அது அடைகிறது. தண்டனைக்கு உள்ளாகிறது. படித்தவர்களில் கூட பலர் தற்கொலை செய்துகொள்வதை அன்றாடம் பத்திரிகைகளில் படிக்கிறோம். கேள்விபபடுகிறோம் தற்கொலை செய்துகொண்டால் துன்பம் நீங்கிவடும் என்று பலர் தவறாக எண்ணுகிறார்கள். அப்படிப் பட்டவர்கள் மேற்சொன்ன விஷயங்களை நன்கு உணர்ந்துகொண்டால் தற்கொலைசெய்துகொள்ளும் எண்ணத்தையே மாற்றிக்கொள்வர் என்பது நிச்சயம்.

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 2-30, 7-00
எம். ஜி. ஆர் - சாவித்திரி
வேட்டைக்காரன்

நாகம்ஸ் (சுன்னாகம்)
தினசரி 2-45 6-45
ஜெய்சங்கர் - நிர்மலா
எடுப்பார் கைப்பிள்ளை

சாந்தி இன்று மட்டும்
யாழ் நகர்
போன்: 7642
தினசரி 10-30, 2-30, மாலை 6-30
ஒரு தாய் மக்கள் (புதிய பிரதி)
12-9-77 முதல் பிரேம்நஸீர், ஷைலவதி
நான் வளர்த்த தங்கை
[புதிய பிரதி]

Regal (Jaffna)
Daily at 10-30 a.m., 3-30 & 6-30 p. m.
One of the foremost Fun Films of the year.
The story of strange carrying—on at a Caravan
KENNETH WILLIAMS — ELKE SOMMER
in
"CARRY ON BEHIND"
(Color)

## பதினாறு......

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம் எனப் பாடினார் பாரதியார். இவ்வகையில் ஏறக்குறைய பதினாறு மொழிகளிலே சிறந்த பாண்டித்தியம் பெற்ற சுவாமி அவர்கள், தமது சிறந்த ஆராய்ச்சியின் பயனாக, தமிழ்மொழியின் சொற்பிறப்பை ஆராய்ந்து, அதன் தொன்மையையும் இனிமையையும் உலகறிய வைத்தார்கள்.

ஆரிய திராவிட மொழிக் குடும்பங்களிடையே விளங்கிய பல புதிய தொடர்புகளை இவர் எடுத்து விளங்கினார். தமது நுண்ணிய ஆராய்ச்சியின் பலனாக, தமிழ்ச்சொற்களைப் பல வகுப்புகளில் அடைக்கலாம் எனவும் சொற்கள் யாவும் வேர்ச் சொற்களைக் கொண்டுள்ளவை எனவும் இவர் காட்டியுள்ளார். இவ்வாராய்ச்சியின் பயனாக இவர் ஆக்கிய அரும்பெரும் நூல், 'சொற்பிறப்பு-ஒப்பியல் தமிழகராதியாகும். (Etymological and Comparative Lexicon of the Tamil Language.)

சுவாமி அவர்கள் ஆக்கிய நூல்கள், வரலாறு, மத ஆராய்ச்சி, தர்க்கம், தமிழ் மொழி போன்ற பல்வேறு துறைகளைக் கொண்டனவாம். இவர் ஆக்கிய வரலாற்று நூல்களுள், யாழ்ப்பாண வைபவம் விமர்சனம், யாழ்ப்பாணத்துத் தொல்குடிகள், தமிழரில் சாதி உற்பத்தி இலங்கையில் கத்தோலிக்கம் என்னும் நூல்கள் மிக முக்கியமானவையாம். பிற மதங்கள் பற்றி இவர் ஆக்கிய நூல்களுள், 'சைவ சித்தாந்தம்', 'பிள்ளையார் ஆராய்ச்சி' 'கிறிஸ்தவமும் பௌத்தமும்' 'மிருக பலி ஆராய்ச்சி' என்னும் நூல்கள் முக்கியமானவையாகும்.

(தொடரும்)

## யாழ்ப்பாணத்தில்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் பண்பாட்டின்சிறப்பை உணர்ந்துள்ளேன். ஆகையால் எங்கள் அநேகர் மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுவதால் ஏற்படும் தீமைகளை உணர்ந்து அதைப்போக்க என்னாலான முயற்சிகளைச்செய்து வருகிறேன். முப்பது வருடங்களுக்கு தமிழ் தலைவராக விளங்கிய எனது தந்தையாரும் மேனாட்டாரைப் போலவே

(8-ம் பக்கம் பார்க்க)

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! தொடர்ந்து எட்டுக் காட்சிகள் ஹவுஸ் புல்!!!
ஸ்ரீதர் யாழ்நகர்
இப்பொழுது நடைபெறுகிறது
இரவுக் காட்சிகள் காண்பிக்கப்படமாட்டாது
தினசரி காலை 8-00, 11-00, பி. ப. 2-00, 5-00 மணி
இந்தியாவில் 250 நாட்களுக்குமேல் ஓடி புயல்வேக சாதனை படைத்த புதுமைச் சித்திரம்!



கலை இளவரசன்
★ சிவகுமார்
கலையரசி
★ சுஜாதா
★ ஸ்ரீகாந்த்
★ படாபட்ஜயலக்ஷ்மி
★ மணிமாலா
★ சுப்பையா
★ எம். என். ராஜம்
மற்றும் பலர் நடித்த



இசையமைப்பு: இளையராஜா
★ அன்னக்கிளி ★

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தவன். அவன் சொல்வது சரியாகத்தான் இருக்கும். இதுக்கெல்லாம் நான்தானே காரணம். பெண்டாட்டிமுன் தலைகுனிந்து நிற்கிறேன் ஏன் இவளை முடித்தபடியால் தானே "சோபனா நான் இரண்டே இரண்டு கேள்விகள் கேட்கிறேன். மேரி மாதா மேல் சத்தியம்வைத்து உண்மை சொல்லுவியா."

"மேரிமாதாமேல் சத்தியமா உண்மை சொல்லுவேன், கேளுங்கோ."

அவளின் முகத்தை ஊடுருவிப் பார்த்தபடியே கேட்கிறேன் "சோபனா என்னோடு நீ உண்மையாக சந்தோஷமாக இருக்கிறியா? என்னை எதற்காக நீ மணம்முடித்தாய்? நீ நினைத்திருந்தால் எப்படி எப்படியோ இருந்திருக்கலாமே. இதற்குமட்டும் விடைசொல்லிவிடு நான் நிம்மதியாக இருப்பேன்."

அவள் முகத்தில் ஓடப்போகும் உணர்வின் மாற்றங்களைப் படம்பிடிக்க ஆவலுடன் என் கண்கள் காத்திருக்கின்றன மேரிமாதா, இன்று எனக்கு நிம்மதியை உம்மால் கொடுக்கமுடியுமா? என் நெஞ்சைக் குடைந்துகொண்டு இருக்கும் பல நாளைய கேள்வி இது.

"அத்தான், நீங்கள் மட்டுமல்ல எல்லா ஆண்களும் பெண் இனத்தைப்பற்றித் தப்பான கணக்கையே போடுகிறார்கள். மணமகளாக வரும் ஒருத்திஐ செல்வம், அந்தஸ்து, பகட்டான வாழ்வு என்பனவற்றைக் கொடுத்து விலைக்குவாங்கிவிடலாம் என்று எல்லா ஆண்களும் நினைக்கிறார்கள். செல்வம், அந்தஸ்து, பகட்டான வாழ்வு இதைமட்டும்தான் ஒரு பெண் கணவனிடம் எதிர்பார்த்தால், மணமகளிற்கும், விலைமகளிற்கும் என்னத்தான் வித்தியாசம். எல்லாவற்றிற்கும் மேலாக ஒருத்தி, தன் கணவனிடம் எதிர்ப்பார்ப்பது அவன் அன்பு ஒன்றுதான். அந்த அன்பு மட்டும் அவளுக்குக் கிடைத்துவிட்டால், அவள் அவனுக்காக எதையும்செய்யத் துணிந்துவிடுவாள். நான் உங்களை மணந்து உங்கள் அன்பிற்காக-என்மேல் நீங்கள் வைத்திருக்கும் தூய்மையான அன்புடன் கூடிய நம்பிக்கைக்காக மேரிமாதாமேல் சத்தியமாகசொல்கிறேன்; 'நான் உங்களுடன் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன். உங்கள் ஏக்கங்கள் எனக்குப் புரியுது. உங்கள் அன்புமட்டும் எனக்கிருந்திட்டால் நிச்சயமாக நாம் இருவரும் நன்றாக வாழமுடியும். அந்த நம்பிக்கையெனக்கிருக்கு. அத்தான், உள்ளம் என்கின்ற கோவிலில் உதயமாகும் எண்ணங்கள்தான் ஏற்றிவைத்த மெழுகு தீபங்கள். மனச்சாட்சி என்கிற மணியோசை அங்கு ஒலித்துக்கொண்டிருந்தால் மாதாவின் அருள் நமக்குக் கிடைக்காமலா போய்விடும்? வீணாக மனதைக் குழப்பாமல் இப்பவாவது சாப்பிட வாருங்கோ. எனக்குப்பசிதாங்க முடியவில்லை."

அவளின் மெல்லிய இடை நெளிய உள்ளே போகிறாள்.

அவளைப்பார்த்து ஒரு நீண்ட பெருமூச்சு என்னிடமிருந்து வெளிப்படுகிறது. நெஞ்சு இன்பத்தால் விம்முகின்றது. இன்று அவள் சொன்ன தீர்ப்பு, சட்டங்கள் சொல்லாத தீர்ப்பு. நெஞ்சிற்கு அவள் கண்ட நீதி இது, என்மனைவி, அவளுக்கு நிகர் அவளே!

கடல் அலைகள் துள்ளிக்குதிக்கின்றன. என் அகக்கடலிலும் இன்ப அலைகள் முட்டிமோதுகின்றன. அவள் பின்னே மௌனமாக நடக்கிறேன்.

(யாவும் கற்பனை)

# கதிர்காமம் முகாமில் 1500 அகதிகள் தஞ்சம்

## இவர்களை அழைத்துவர உதவுமாறு தமிழ் எம். பிக்களிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

கதிர்காமம் அகதிகள் முகாமில் தஞ்சமடைந்துள்ள 1500 அகதிகள் வடக்குகிழக்கு மாகாணங்களுக்கு வர விருப்பம் தெரிவித்துள்ளார்கள்.

கடந்த இருவாரங்களாக கதிர்காமம் அகதிகள் முகாமிலிருந்துவரும் இவர்களை உடனடியாக தமிழ்ப்பகுதிகளுக்கு அனுப்ப ஒழுங்குசெய்யுமாறு அகில இலங்கை இந்துமத குருபீட துறவிகள் திருக்கூட்ட தலைமை ஸ்தாபகர் தவத்திரு. சிவகுரு அடிகள் தமிழ் எம். பிக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கதிர்காமப்பகுதியில் பாதிக்கப்பட்ட 1334 அகதிகள் இம்முகாமில் வந்திருக்கிறார்கள். கொங்கட்டி, புத்தல பகுதியிலிருந்து 134 அகதிகளும், மொனராகலையிலிருந்து 128 அகதிகளும்இம்முகாமில் தஞ்சமடைந்துள்ளார்கள்.

இவர்கள் பிரஜா உரிமை அற்றவர்களாகவும், இந்தியப் பிரஜைகளாகவுமிருக்கின்றனர் இவர்களில் பெரும்பாலானோர் இந்தியா செல்வதற்கே முதலில் விருப்பம் தெரிவித்தனர், ஆனால் அது உடனடியாக சாத்தியமாகாத பட்சத்தில் வடக்கு. கிழக்கு மாகாணங்களுக்குச் செல்ல விருப்பம் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் வசித்து வந்த இடத்தைப் பெரியகோவில் பகுதியுடன் சேர்க்க அரசு திட்டமிட்டிருப்பதால், இவர்களை தண்ணீர் வசதியுள்ள காட்டுப்பகுதியில் குடியேற்றத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனை அகதிகள் எவரும் விரும்பாததினால், அவர்கள் வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு செல்லவிரும்புகின்றனர்.

வடக்கு கிழக்கிற்கு செல்வதற்கு அகதிகளுக்கு பணவசதியில்லாததினால், அரசின் உதவியை எதிர்பார்க்கின்றார்கள். இதற்கான ஒழுங்குகளைச் செய்யுமாறு தமிழ் எம். பி. க்களிடம் கோரப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வாழ்ந்துவந்தார். அக்காலத்தில் அது ஒருவேளை தேவையாகவிருந்திருக்கலாம். அவர் நெடுங்காலம் சீவித்திருந்தால் மேனாட்டு நாகரித்தைக் கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதில் பிழைகளை, எனது மைத்துனர் திருவாளர்கள் இராமநாதன், அருணாசலம் போலுணர்ந்து சீர்திருத்த இயக்கத்தில் இறங்கியிருப்பார் ஆகவே அவருடைய மகன் இச் சீர்திருத்த வேலையைச்செய்துவருவது பொருத்தமே. என் தாயாரைப்பொறுத்தவரையில் தான் என் தகப்பனாரை மணந்ததின் பயனாக ஆங்கிலேயருக்கும் தமிழருக்கும் நல்லுறவு ஏற்படவேண்டுமென்பதே அவர் விருப்பம். நான் இப்பொழுது செய்துவரும் வேலைக்கு அவருடைய முழு ஆசியுமுண்டு. இந்தியாவின் கடந்த மூவாயிரம் ஆண்டுச் சரித்திரத்தை- நமது சமயம், தத்துவ சாத்திரம், கலைகள் முதலியவற்றை விளக்கும் சரித்திரத்தை ஆராயும்பொழுது இதனிற் காணப்படுவதிலும் சிறந்த இலட்சியங்களை வேறெங்கும் காணமுடியாதென்ற முடிபுக்கு வருகின்றேன். இவ்வுண்மையை பலர் உணராதிருக்கின்றனர் தீர்க்காலோசனை செய்யாது, மாற்றம் ஏற்படுத்த வேண்டுமென்ற விருப்பினால் போலும் எங்கள் பண்டை முறைகளை மாற்றப் பார்க்கிறார்கள்.

(தொடரும்)



# பிரதம மந்திரிக்கு பண்டிதர் தந்தி!

யாழ்ப்பாணம். ஞாயிறு

வேண்டும் என்றே தமிழ் மக்களுடன் அநாகரிகமான முறையில் நடந்துகொள்ளும் பாதுகாப்புப் படையினரின் நடவடிக்கைகளால் தமிழ் மக்களின் வெறுப்பும் வேதனையும் அதிகரிப்பதோடு அவர்கள் விரக்தியும் அடையக்கூடும்.

இவ்வாறு ஊர்காவற்றுறை தேசியஅரசுப்பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதமருக்கு அனுப்பியுள்ள தந்தி ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிதர் இரத்தினம் தமது தந்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

கடந்த 9-ம் திகதி காலை 10 மணியளவில் தொண்டமானாறுச் சந்தியில் எனது காரைப் பொலிசார் வழி மறித்துச் சோதனை போட்டார்கள். அப்போது நான் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் என்று கூறியும் அவர்கள் அதைப் பொருட்படுத்தாமல் என்னைச் சிறுமைப்படுத்தும் வகையில் காரைச் சோதனை போட்டார்கள். இதேபோன்று பொதுமக்களையும் சோதனை என்று கூறிக்கொண்டு அவமரியாதை செய்கிறார்கள். (கா)

## நல்லூர்...

### சப்பறம்

1-ம் பக்கத் தொடர்ச்சி

இன்றுமாலை சப்பறத் திருவிழா நடைபெறும். -30 மணிக்கு சுவாமி சப்பறத்தில் எழுந்தருளுவார்.

நல்லூர் கந்தசுவாமிகோவில் வருடாந்த தேர்த்திருவிழா நிகழ்ச்சிகளை இலங்கை ஒலியரப்புக்கூட்டுத்தாபனம் நாளை திங்கட்கிழமை அஞ்சல் செய்யும்.

[கெ-இ]

# தமிழர் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு காண்க!

## ஊற்று நிறுவனம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

விரக்தியுற்றிருக்கும் தமிழ் இனம் நீண்டகாலமாக உதாசினம்செய்யப்பட்டுவந்ததன் குறைபாடுகளுக்குத் தீர்வு கண்டு இலங்கையில் தமக்கு உரிய இடம் அளிக்கப்படுமா என ஆவலோடு எதிர்பார்த்திருக்கிறது. எனவே அனைத்துக்கட்சி மாநாட்டை உடனடியாகக் கூட்டி சிறுபான்மை மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவேண்டியது அவசியம் என நாம் கருதுகிறோம்.

பிரதமமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு ஊற்று நிறுவனம் அனுப்பியுள்ள பகிரங்கக் கடிதத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அப்பகிரங்கக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நாடு அந்நியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றபின்பு இருபெரும் சமூகங்களையும் சேர்ந்த தலைவர்கள் சிலர் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான முயற்சிகளை அவ்வப்போது எடுக்க முற்பட்டபோதும் சமூகங்களிடையே இருக்கும் வேறுபாடுகளை மிகைப்படுத்தி இனவிரோதக் கொள்கைகளைத் தட்டியெழுப்பிய சிலரின் செயல்களால் அவ்வகை முயற்சிகள் தோல்விகண்டன.

தங்களுடைய வழிகாட்டலின்கீழ் உள்ள ஐ. தே. கட்சி தமிழினத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகள் காரணமாய் தனிநாட்டுக் கோரிக்கை தோன்றுவதற்குக்கூட வழிபிறந்துள்ளது என ஏற்றுக்கொண்டுள்ளது. தங்களுடைய கட்சியின் வேலைத்திட்டத்திலே சிறுபான்மைச் சமூகத்தினரை வருத்தும் பிரச்னைகள் ஐயம்திரிபற விபரிக்கப்பட்டு அவற்றிற்கு பரிகாரம் தேடுமுகமாக அனைத்துக்கட்சிவட்டமேசை மகாநாடு கூட்டப்படுமென்றும் உறுதியளிக்கப்பட்டது.

அண்மையில் முடிவுபெற்ற தேர்தலிலே ஐ. தே. க. வரலாறுகாணாத மகோன்னத வெற்றியை ஈட்டி அது கொடுத்திருந்த வாக்குறுதிகளுக்கும் வேலைத்திட்டத்திற்கும் மக்களின் அங்கீகாரத்தைப் பெற்றது. மற்றைய அரசியல் ஸ்தாபனங்கள்கூட சிறுபான்மைச்சமூகத்தினரை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளுக்கு காலதாமதமின்றிதீர்வுகாணப்படவேண்டுமென்பதை ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆனால் தங்களது அரசாங்கம் பதவியேற்று ஒருசில வாரங்கள்கூட முடியுமுன்னரே இனக்கலவரங்கள் தோன்றியது மிகவும் துர்ப்பாக்கியமானதாகும்.

அவற்றினால் மனம் மிக நொந்திருக்கும் தமிழ்ச்சமூகம் இலங்கையில் தனது வருங்காலம் எப்படி அமையும் என்பதுபற்றி மனத்தெளிவற்ற நிலைக்குத் தற்போது தள்ளப்பட்டுள்ளது.

எனவே தமிழ்ப் பிரசைகளின் மனத்திலே தோன்றியுள்ள ஐயப்பாடுகளை அகற்றுமுகமாக உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அத்தியாவசியமானதாகும் (ஈ)



# பரிவாரமூர்த்தி கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வண்ணார்பண்ணை நல்லதண்ணீர் கிணற்றடி ஞானவைரவர் சுவாமிகோயில் பரிவாரமூர்த்தி ஸ்ரீ முருகப்பெருமான் மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 16-ம் திகதி [ஆவணி 31] வெள்ளிக்கிழமை காலை 11-45 மணிக்கும் 12-20 மணிக்குமிடையில் நடைபெறும்.

14-ம் திகதி [ஆவணி 29] புதன்கிழமை விநாயகவழிபாடு, யாகாரம்பம், வியாழக்கிழமை காலை-மாலை பூஜை, பிம்பாஸ்தாபனம், வெள்ளிக்கிழமை காலை பச்சிமசந்தானம், ஸ்தூபி அபிஷேகம், விநாயகர், வைரவர் அபிஷேகம், பகல் 12-10 மணிக்கு ஸ்ரீமுருகன் கும்பாபிஷேகம், யஜமான் அபிஷேகம், மங்கள ஆசீர்வாதம் தொடர்ந்து மண்டலாபிஷேகம் இடம் பெறும்.

# மரண அறிவித்தல்

## முருகுப்பிள்ளை கார்த்திகேசன்

முன்னாள் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி, பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி அதிபர் முருகுப்பிள்ளை கார்த்திகேசன் [கார்த்திகேசு மாஸ்டர்] 10-9-77 சனிக்கிழமை காலமானார். அன்னாரின் ஈமக்கிரிகைகள் திங்கட்கிழமை [12-9-77] மாலை வட்டுக்கோட்டையில் நடைபெறும். [மனைவி, மக்கள், சகோதரர்.] 7064

# இடம்பெயர்க்கப்பட்ட ஆசிரியர்களே

இடம்பெயர்க்கப்பட்ட அரச ஊழியர்களுக்கான கடமை லீவு 12-ம் திகதியுடன் ரத்துச் செய்யப்படுவதான அரசின் அறிவித்தல் உங்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதுபற்றி கல்வி அமைச்சருடன் கதைத்து முடிவு செய்யச் சங்கப் பொதுச் செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் தலைமையிலான குழு கொழும்பு சென்றுள்ளது. இவ்வார இறுதிக்குள் கூட்டப்படும் எமது கூட்டத்தில் இதற்கான முடிவு உங்களுக்கு அறிவிக்கப்படும். அதுவரை கலவரப்படாது வழமைபோற் செயற்படுமாறும் மேற்கொண்டு தேவையான விபரங்களுக்கு எமது கிளைச் செயலாளர்களுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

சி. சிவபாலசிங்கம்
செயலாளர், யாழ் மாவட்டம்,
இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம்.

யாழ்ப்பாணம்
09-09-1077

7061

## சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு




இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu, Post Box No. 49, Jaffna. Telegram Eelnaadu. Telephone 389. Registerd as News paper in Sri Lanka.